# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly

மக்களுக்கான குரல்

தமிழ் மாத இதழ்

● குரல் – 5 ● இதழ் – 9 ● நவம்பர், 2025 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume - 5 ● Issue - 9 ● November, 2025 ● Monthly ● Price Rs. 25/-





**தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி**

## மகுடம் சூடியது இந்திய மகளிர் அணி

## திமுகவில் இணைந்தார் ஓபிஎஸ் ஆதரவாளர் மனோஜ் பாண்டியன்

### கணக்கெடுப்பு படிவம் கொடுக்காவிட்டால்

# வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படும்

# வாழ்த்துகிறோம்!



**செட்டிநாட்டரசர் டாக்டர். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின்**
**முன்னாள் நேர்முக உதவியாளரும்,**
**டாக்டர் M.A.M இராமசாமி அவர்களின் முன்னாள் நேர்முகச் செயலாளருமான**

# திரு. S.இராஜேந்திரன் அவர்கள்

**சான்றோர் குரல் மாத இதழின் கௌரவ ஆசிரியராக பொறுப்பேற்றார்.**
**அவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்!**

... அன்புடன் ...

– ஆசிரியர்

# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

● குரல் - 5 ● இதழ் - 9 ● நவம்பர், 2025, 2025 ●தமிழ் மாத இதழ் ●விலை ரூ.25/-

●Volume-5 ●Issue-9 ●November,2025 ●Monthly ●Price Rs.25/-



நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்

G.B. **பச்சையப்பன்**

கௌரவ ஆசிரியர்

டாக்டர் M.A.M.**ராமசாமி** அவர்களின்

முன்னாள் முதன்மைச் செயலாளருமான

செட்டிநாடு S. **ராஜேந்திரன்**

ஆலோசகர்கள்

நிதில் & கோ S.R.P. ராஜன்

நடிகர் பயில்வான் ரங்கநாதன்

R. கதிரவன்

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்

R. ரிச்சர்ட் ராஜ், K. முகமது அலி

S. சதீஷ்குமார், K. குட்டி கிருஷ்ணன்

L. லிங்கேஷ்வரன்

G.K. பாண்டியநேரு (தேனி)

குரு பாண்டியன் (திண்டுக்கல்)

நிருபர்கள்

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

G. ராஜ்குமார் (விருதுநகர்)

P. ஆகாஷ் (சென்னை)

M. ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

S. ஸ்ரீனிவாசன் (காஞ்சிபுரம்)

K. தினேஷ் (மத்திய சென்னை)

M. தினேஷ்

லட்சுமணன் (திண்டுக்கல்)

புகைப்பட கலைஞர்

எ. சங்கர்

VRJ Graphics

பக்க வடிவமைப்பு:

90941 19636

நிர்வாக மேற்பார்வையாளர்கள்

P. அஜய் B.Com., MBA., P. ஆகாஷ் B.Com.,

சட்ட ஆலோசகர்கள்

E. யோபு M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. நவீன் சந்தர் B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. பார்த்திபன் B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)



பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600004

தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025



அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


## ஆசிரியர் கடிதம்...

# 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணையை வெளியிட்டார் அமைச்சர் அன்பில் மகேஷ்



*10 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு அட்டவணையை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டார்.*

*இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ்; தமிழ்நாட்டில் மார்ச் 11ம் தேதி 10ம் வகுப்பு பொதுத் தேர்வு தொடங்குகிறது. மார்ச் 11 ல் தொடங்கி ஏப். 6 வரை 10ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெற உள்ளன. மே 20 ஆம் தேதி 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். மார்ச் 2ம் தேதி 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் தொடங்குகிறது.*

*மார்ச் 2ல் தொடங்கி மார்ச் 26 வரை 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெற உள்ளன. 12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 8ம் தேதி வெளியாகிறது. தேதி அறிவித்ததால் மாணவர்கள் பதற்றமடைய தேவையில்லை; உற்சாகத்துடன் தேர்வுக்கு தயாராகுங்கள். மாணவர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று கால்குலேட்டர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*மாணவர்களின் படிப்புக்கு, தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் கல்வியாகும். அதை நீங்கள் நல்ல முறையில் கற்று, வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும். மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கல்வி வழிவகுக்கும் என்பதினை வரவேற்கிற்கும் விதமாக 10, 12ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் வெற்றி பெற சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்..*



**G.B.பச்சையப்பன்**

தலைமை ஆசிரியர்




## பிஹாரில் 125 யூனிட் வரை இலவச மின்சாரம், ரேஷன்:

# ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு

## என்டிஏ தேர்தல் அறிக்கையில் உறுதி

“பிஹாரில் ஒரு கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப் படும்'' என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தல் அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

பிஹாரில் மொத்தமுள்ள 243 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு வரும் 6 மற்றும் 11ம் தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை 14ம் தேதி நடைபெறுகிறது.

இந்த தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் (என்டிஏ) ஆர்ஜேடி காங்கிரஸ் மெகா கூட்டணிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், என்டிஏ கூட்டணி தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற கூட்டத்தில், முதல்வர் நிதிஷ்குமார் என்டிஏ தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அப்போது, பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர்கள் ஜிதன் ராம் மாஞ்சி, சிராக் பஸ்வான் மற்றும் ஆர்எல்பி தலைவர் உபேந்திர குஷ்வாகா ஆகியோர் உடன் இருந்தனர்.

என்டிஏ தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

◆ ஒரு கோடி பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இளைஞர்களுக்காக மெகா திறன் மையங்கள் அமைக்கப்படும்.

◆ விளையாட்டு நகரம் அமைக்கப்படும். மாவட்டந்தோறும் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். 100 எம்எஸ்எம்இ பூங்கா, 50 ஆயிரம் புதிய காட்டேஜ் தொழிற்சாலைகள், சிப்செட், செமி கண்டக்டர், உற்பத்தி தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

◆ பெண்களுக்கு அதிகாரம் வழங்க 22 லட்சம் பெண்களுக்கு உதவி செய்ய திட்டம், ஒரு கோடி பெண்களை லட்சாதிபதியாக்கும் திட்டம். பெண் தொழில் முனைவோரை கோடீஸ்வரர்களாக்கும் திட்டம்.

◆ கிஸான் சம்மான் நிதி ஆண்டுக்கு ரூ.6,000ல் இருந்து ரூ.9,000 ஆக உயர்த்தப்படும்.

◆ பட்டியலின மாணவர்களுக்கு ஒவ்வொரு மண்டலத்திலும் உறைவிட பள்ளிகள் ஏற்படுத்த ரூ.9 லட்சம் முதலீடு. உயர்க் கல்வி பயிலும் பட்டியலின மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000 உதவித் தொகை, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் உயர்க்கல்வி பயில ரூ.10 லட்சம் வரை உதவித்தொகை. ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி, மதிய உணவு, 50 லட்சம் புதிய வீடுகள் கட்டப்படும், இலவச ரேஷன்,

›125 யூனிட் மின்சாரம் இலவசம். அனைத்து வகை பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும்.

இதுபோன்ற பல திட்டங்கள் என்டிஏ தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ஜேடி காங்கிரஸ் தலைமையிலான மெகா கூட்டணி சார்பில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் வீட்டுக்கு ஒருவருக்கு அரசு வேலை, பழைய ஓய்வூதிய திட்டம் அமல் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ●

பிஹார் தேர்தலில் தாக்கம் செலுத்தும்

# 'தமிழ்நாடு மாடல்' வாக்குறுதிகள் சொல்வதென்ன?




பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பிரதான அணிகளான ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளின் மகா கூட்டணியின் தேர்தல் அறிக்கைகளில் பல்வேறு தமிழகத் திட்டங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன. இதன் பின்னணி குறித்து பார்ப்போம்.

பிஹார் சட்டப்பேரவைக்கு நவம்பர் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி, ஹெச்ஏஎம், ஆர்எல்பி ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன. எதிர்க்கட்சிகளின் மகா கூட்டணியில் ஆர்ஜேடி, காங்கிரஸ், சிபிஐ(எம்எல்), விஐபி, சிபிஐ, சிபிஎம், ஐஐபி உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி, ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ் கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றன.

பிஹார் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் மகா கூட்டணி இடையே கடும் போட்டி நிலவிவரும் நிலையில், இரு கூட்டணிகளும் தங்கள் தேர்தல் அறிக்கைகளை முக்கிய ஆயுதமாக நம்பியுள்ளன. எனவே, இந்த இரு தேர்தல் அறிக்கைகளிலும் மக்களை கவரும் பல்வேறு வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன. முக்கியமாக இந்த கூட்டணிகளின் இரு தேர்தல் அறிக்கையிலும் தமிழக திட்டங்களின் தாக்கம் அதிகமாக உள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகா கூட்டணியின் தேர்தல் அறிக்கை சில நாட்களுக்கு முன்பு வெளியானது. இதில் பெண்களுக்கு மாதம் 2500 ரூபாய் நிதியுதவி, 200 யூனிட் இலவச மின்சாரம், மூத்த குடிமக்கள் ஓய்வூதியம் உயர்வு, சிலிண்டர் மானியம், மாணவர்களுக்கு உதவித் தொகை, மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட பல்வேறு தமிழக மாடல் அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்தச் சூழலில், தற்போது வெளியாகியுள்ள பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் அறிக்கையிலும் தமிழக மாடல் திட்டங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. முக்கியமாக திமுக அரசால் சமீபத்தில் தொடங்கி பெரும் வரவேற்பை பெற்றுள்ள பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டம் பிஹாரில் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல கடந்த அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட 100 யூனிட் இலவச மின்சார திட்டத்தை பின்பற்றி வீடுகளுக்கு 125 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

மேலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல் சமூக மாணவர்களுக் கான மாதாந்திர உதவித்தொகை திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவி திட்டம், பெண்களுக்கான தொழில் முனைவோர் திட்டம், ஏழை எளியோருக்கான இலவச வீடுகள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு தமிழக மாதிரி வாக்குறுதிகளை தேசிய ஜனநாயக கூட்டணி வெளியிட்டுள்ளது.

அதேபோல மருத்துவ காப்பீடு, மாவட்டம்தோறும் மருத்துவமனைகள், தரமான மருத்துவ சேவை, தரமான இலவச கல்வி, இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளிலும் தமிழகத்தின் தாக்கம் அதிகமாகவே உள்ளது.

முக்கியமாக, இரு கூட்டணிகளின் தேர்தல் அறிக்கையிலும் இம்முறை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பட்டியல் பழங்குடியின சமூகத்தினர் மேம்பாடு குறித்த பல்வேறு அறிவிப்புகளும் வெளியாகியுள்ளன. அதேபோல, தொழில் மேம்பாடு, மெட்ரோ திட்டங்கள், சாலை உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து வாக்குறுதிகளும் இம்முறை பிஹார் தேர்தலில் கவனம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் திமுக, அதிமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் எப்போதும் இலவச அறிவிப்புகள், பெண்களுக்கான திட்டங்கள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், கல்வி, மருத்துவம், விவசாயம், உள்கட்டமைப்பு, தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு பிரிவுகளில் மக்களை கவரும் அறிவிப்புகள் இடம்பெறும். அதே பாணியை இந்த முறை பிஹாரில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளின் மகா கூட்டணி ஆகியவை பின்பற்றியுள்ளன.

பிஹாரில் உள்ள மக்களிடம் தமிழகம் வளர்ச்சியடைந்த மாநிலமாக முன்னிறுத்தப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், பிஹார் உள்ளிட்ட வட மாநிலங்களில் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கில் தமிழகத்துக்கு வேலைவாய்ப்புக்காக படையெடுக்கும் மக்கள் தமிழகத்தின் வளர்ச்சியை நேரில் பார்த்தவர்கள். இவர்கள் தமிழகத்தில் பணியாற்றிய நாட்களில் தமிழகத்தின் முக்கிய திட்டங்கள் குறித்து அறிந்து வைத்திருப்பவர்கள். எனவேதான், 'தமிழ்நாடு மாடல்' வாக்குறுதிகள் தற்போதைய பிஹார் தேர்தலில் அதிகம் கவனம் பெற்றுள்ளன என்றும் அரசியல் விமர்சகர்கள் சொல்கின்றனர்.

பிரதான கூட்டணிகள் மட்டுமின்றி பிஹாரில் புதிதாக களம் கண்டுள்ள பிரசாந்த் கிஷோரும் தமிழகத்தில் தேர்தல் பணிகளில் களம் கண்டவர். இதனால் அவர் பிஹார் தேர்தல் பரப்புரை பேச்சுக்களில் அவ்வப்போது தமிழகம் குறித்து குறிப்பிட்டு வருகிறார். இதனால் அவரின் தேர்தல் அறிக்கையிலும் தமிழக மாதிரி அறிவிப்புகளை எதிர்பார்க்கலாம்.

சமூக நீதி, தொழில் துறை, கல்வி, வேலைவாய்ப்பு, மகளிர் திட்டங்கள், விவசாயிகள் நலன் என பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கு தமிழகமே முன்மாதிரி. அந்த வகையில் தற்போதைய பிஹார் தேர்தலிலும் 'தமிழ்நாடு மாடல்' அறிவிப்புகள் தடம் பதித்துள்ளது என்று தமிழக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். ●



## பிஹார் மக்களின் நிகழ்காலத்தைப் பற்றி

# பாஜக தலைவர்கள் பேசுவதில்லை

பாஜக தலைவர்கள் கடந்த காலம் குறித்தும் எதிர்காலம் குறித்துமே பேசுகிறார்களே தவிர நிகழ்காலம் பற்றி பேசுவதில்லை என பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பெகுசராய் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி, "பிஹாரில் இருந்துதான் மகாத்மா காந்தி பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான தனது போராட்டத்தைத் தொடங்கினார். பிஹார் நிலம் நாட்டுக்கு நிறைய கொடுத்துள்ளது. இந்த நிலம் நாட்டுக்கு சுதந்திரம், முன்னேற்றம், சிறந்த தலைவர்கள், முக்கிய அதிகாரிகள், சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்களைக் கொடுத்தது. ஆனால், இன்றைய பிஹாரைப் பார்க்கும்போது, இவ்வளவு பெரிய நிலம் ஏன் வளர்ச்சியடையவில்லை என்ற கேள்வி எழுகிறது.

இங்கு இருப்பது இரட்டை இயந்திர அரசு அல்ல. இது ஒற்றை இயந்திர அரசு. இங்கு நடக்கும் அனைத்தும் மத்திய அரசால் இயக்கப்படுகிறது. முதல்வர் நிதிஷ் குமாரை பாஜக மதிப்பதில்லை; அவர் கூறுவதை கேட்பதில்லை.

பிஹார் மண்ணில் இருந்து மகாத்மா

### பிரியங்கா காந்தி விமர்சனம்

காந்தி தொடங்கிய போராட்டம் நமது அரசியலமைப்புக்கானது. அரசியலமைப்புதான் உங்களுக்கு அதிகாரத்தை அளித்தது, உங்களுக்கு நம்பிக்கையை அளித்தது, வாக்குரிமை எனும் மிகப் பெரிய உரிமையை வழங்கியது. ஆனால், பாஜகவும் நரேந்திர மோடியும் இந்த உரிமையை பலவீனப்படுத்தவே பாடுபட்டுள்ளனர்.

20 ஆண்டுகளாக பிஹாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் உள்ளது. இந்த ஆட்சி உங்கள் உரிமைகளை பலவீனப்படுத்தி உள்ளது. நீங்கள் சமமாக நடத்தப் படவில்லை. உங்களைப் பிரிக்க அரசியல் பயன்படுத்தப்பட்டது. உங்களை திசை திருப்ப பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

சமீபத்தில் பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் ரத்து செய்யப்பட்டன. இவை வெறும் வாக்குகள் அல்ல; உங்கள் உரிமைகள். பாஜகவும் நரேந்திர மோடியும் வாக்குத் திருட்டை நாட காரணம், மக்கள் விழித்தெழுந்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டதுதான்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தலுக்கு முன்னதாக ரூ.10,000 வழங்கியது. அந்த பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால், அவர்களுக்கு வாக்களிக்காதீர்கள். உங்கள் வாக்குகளை அவர்கள் வாங்க அனுமதிக்காதீர்கள். அவர்களின் நோக்கம் நல்லதல்ல. தேர்தல் நெருங்கிவிட்டதால் அவர்கள் சுய ஆதாயத்துக்காக ரூ. 10,000 கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளனர். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பிஹாரில் 20 ஆண்டுகளாக உள்ளது. இதை ஏன் அவர்கள் முன்பே செய்யவில்லை?

பிஹாரில் ஊழல் பெருகி வருகிறது. எல்லா இடங்களிலும் கொள்ளையடிப்பது பரவலாக நடக்கிறது. தேர்வுத் தாள்கள் கசிகின்றன, லஞ்சம் இல்லாமல் மின் கம்பங்கள் அமைக்கப்படுவதில்லை, லஞ்சம் இல்லாமல் சாலைகள், பாலங்கள் கட்டப்படுவதில்லை. இதுகுறித்தெல்லாம் யாராவது கேள்வி கேட்டால், அவர்கள் அடக்கப்படுகிறார்கள். யாராவது எதிர்ப்பு தெரிவித்தால் அவர்கள்

# “இந்திரா காந்திக்கு பிரதமர் மோடியை விட தைரியம் அதிகம்”




“1971 வங்கதேச போரின் போது, இந்திரா காந்தி அமெரிக்காவுக்கு அஞ்சவோ, தலைவணங்கவோ இல்லை. ஆனால், பிரதமர் மோடிக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை எதிர்கொள்ளும் திறமை இல்லை” என்று காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி கூறினார்.

பிஹாரின் நாளந்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, “1971 வங்கதேசப் போராட்டத்தில், அமெரிக்கா தனது விமானங்களையும் கடற்படையையும் இந்தியாவை மிரட்டவும், அச்சுறுத்தவும் அனுப்பியது. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி, ‘உங்கள் கடற்படைக்கு நாங்கள் பயப்படவில்லை, நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள், நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வோம்’’ என்று கூறினார்.

இந்திரா காந்தி ஒரு பெண், ஆனால் பிரதமர் மோடியை விட அவருக்கு அதிக தைரியம் இருந்தது. நரேந்திர மோடி ஒரு கோழை. அவருக்கு அமெரிக்க அதிபரை எதிர்த்து நிற்கும் தொலைநோக்குப் பார்வையோ அல்லது திறனோ இல்லை.

நான் அவருக்கு சவால் விடுகிறேன்: நரேந்திர மோடிக்கு தைரியம் இருந்தால், பிஹாரில் நடைபெறும் எந்தக் கூட்டத்திலும், அமெரிக்க அதிபர் பொய் சொல்கிறார் என்றும், அவர் ‘ஆபரேஷன் சிந்தூரை’ நிறுத்தவில்லை என்றும் கூற வேண்டும். அவரால் அதைச் செய்ய முடியாது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நரேந்திர மோடியை 50 முறை அவமதித்துள்ளார். “நான் மோடியிடம் தொலைபேசியில் ‘ஆபரேஷன் சிந்தூரை’ நிறுத்தச் சொன்னேன். நரேந்திர மோடி இரண்டு நாட்களுக்குள் ஆபரேஷன் சிந்தூரை நிறுத்தினார்” என்று ட்ரம்ப் கூறினார்.

ஆனால் நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் பொய் சொல்கிறார் என்று சொல்ல தைரியம் இல்லை. நரேந்திர மோடி ட்ரம்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது, ஆனால் அவர் பயத்தால் அவரை சந்திக்கவில்லை, அவர் தலைமறைவாக இருக்கிறார். நரேந்திர மோடிக்கு தைரியம் இல்லை.” என்று கூறினார். ●

---

சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

பாஜகவும் நரேந்திர மோடியும் கடந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியுமே பேசுகிறார்கள். நிகழ்காலம் பற்றி அவர்கள் பேசுவதில்லை. காங்கிரஸ் நாட்டுக்கு வளர்ச்சியைக் கொண்டு வந்தது. நாட்டில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள், ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ் ஆகியவை ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்டவை. நாங்கள் கடந்த காலத்தைப் பற்றி பேச தொடங்கினால், அவர்கள் வாயடைத்துப் போவார்கள். ஆனால், நாம் கடந்த காலத்தைப் பற்றி அல்ல நிகழ்காலம் குறித்தே பேசுகிறோம்.

பிஹாரில் தொழிலதிபர்களுக்கு குறைந்த விலையில் நிலங்கள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால், உங்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை. இது நீங்கள் விழித்துக்கொள்ள வேண்டிய நேரம். உங்கள் விதியை நீங்கள் உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டிய நேரம். இல்லாவிட்டால், பெரிய தலைவர்கள் வந்து கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றி பேசுவார்கள். ஆனால், உங்கள் நிகழ்காலத்தைப் பற்றி பேச மாட்டார்கள்.

பணவீக்கம், வேலையின்மை, இடப்பெயர்வு போன்ற பிரச்சினைகள் குறித்து அவர்கள் பேசுவதில்லை. நீங்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வு தருவதில்லை. பிஹாரில் பெண்கள், குழந்தைகள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோருக்கு எதிரான குற்றங்கள் உச்சத்தில் உள்ளன. பெரிய தொழிலதிபர்களும் தலைவர்களும்கூட இங்கு கொல்லப்படுகிறார்கள். இந்த சூழ்நிலையை நாம் மாற்ற வேண்டும்.

பிஹாரில் பாஜக ஜேடியு அரசாங்கத்துக்கான கவுண்ட்டவுன் தொடங்கிவிட்டது. பொதுமக்கள் தங்கள் வாக்குகள் மூலம் அவர்களுக்கு வலுவான பாடம் கற்பிப்பார்கள்.” என தெரிவித்தார். ●

## கணக்கெடுப்பு படிவம் கொடுக்காவிட்டால்

# வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படும்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் பேட்டி

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் வருமாறு :

### சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பணி எதற்கு செய்யப்படுகிறது?

இரண்டு விஷயங்கள் தான். ஒன்று தகுதியான எந்த வாக்காளரும் பட்டியலில் இருந்து விடுபடக்கூடாது.

இரண்டாவது தகுதியற்றவர்கள் யாரும் பட்டியலில் இருக்கக்கூடாது.

தகுதியற்றவர்கள் என்றால் இறந்தவர்கள்

நிரந்தரமாக தமிழகத்தை விட்டு வெளியே சென்றவர்கள்.

இரட்டை பதிவு இருப்பவர்கள்.

### இந்த பணியின் தொடக்கம் என்ன?

சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பணிக்காக

- வாக்காளர் பெயர்
- வாக்காளர் அடையாள அட்டை எண்
- புகைப்படம் அச்சடிக்கப்பட்ட வாக்காளர்

கணக்கெடுப்பு படிவத்தை சம்பத்தப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்கள் வீடு, வீடாக 4ந்தேதி முதல் வந்து கொடுப்பார்கள்.

இதுதான் தொடக்கப்பணி.

அந்த படிவத்தில் கேட்கப்பட்டு இருக்கும் தகவலை பொதுமக்கள் நிரப்பி தரவேண்டும். அதனுடன் எந்த ஆவணமும் இணைத்து தர தேவையில்லை.

### அந்த படிவத்தில் என்ன கேட்கப்பட்டு இருக்கும்?

அந்த படிவம் தற்போதைய வாக்காளர் பட்டியலில் உள்ள தகவல்கள் அடிப்படையில் வழங்கப்பட்டு



இருக்கும்

- அதில் வாக்காளர் எண்,
- பெற்றோர் வாக்காளர் எண்
- ஆகியவற்றை நிரப்ப வேண்டும். தேவைப் படுபவர்கள் தங்களது புதிய புகைப்படத்தை ஒட்டி தரலாம்.

### அந்த படிவத்தை பெறும் வாக்குச்சாவடி அலுவலர்கள் என்ன செய்வார்கள்?

அந்த படிவத்தை பெற்றுக் கொண்டு அதில் உள்ள தகவலை சரி பார்த்து, அதற்காக வடிவமைக்கப்பட்டு உள்ள செயலியில் அவர்கள் பதிவேற்றம் செய்வார்கள்

எளிதாக இந்த பணியை செய்ய ( QR CODE ) 'கியூ. ஆர். கோடு' வசதியும் உள்ளது.

- அந்தவாக்காளரின் பெயர்
- அடையாள அட்டை எண்



ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு 2002 மற்றும் 2005 வாக்காளர் பட்டியலில் சரி பார்க்கப்படும்

அந்தாண்டுகளுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தவர்கள், தங்களது பெற்றோரின் வாக்காளர் பட்டியலின் எண் மூலம் ஆய்வு செய்து இணைக்கப்படும்

### ஒருவேளை 2002, 2005 ஆண்டு பட்டியலில் அவர்கள் பெயர்கள் இல்லாவிட்டால் என்ன நடக்கும்?

அவர்கள் பெயர் வேறு எந்த தொகுதியில் அதற்கு முன்பு இருந்தது என்பதை ஆய்வு செய்து

அதனுடன் ஒப்பிட்டு இணைக்கப்படும்.

ஒருவேளை அவர்கள் பெயர் இல்லாவிட்டால் , அவர்களது பெற்றோர் அடையாள அட்டை, அவர்கள் வசித்த தொகுதி, அவர்களது வாக்காளர் அடையாள அட்டை எண் குறித்தும் முழுமையாக ஆய்வு செய்யப்படும்.

◆ எதிலுமே அவர்கள் பெயர் இல்லாவிட்டால் வரைவு பட்டியலில் அவர்கள் பெயர் இடம் பெறாது.

◆ மீண்டும் அவர்கள் ஆவணங்களை கொடுத்து மனு செய்ய வேண்டும்.

### கணக்கெடுப்பு படிவம் கொண்டு செல்லும்போது வீடு பூட்டப்பட்டு இருந்தால் என்ன நடக்கும் ?

ஒவ்வொரு வீட்டுக்கும் 3 முறை அலுவலர்கள் வருவார்கள்.

### வாக்காளர்கள் முகவரி மாறி இருந்தால் என்ன செய்வது?

அதே பாகத்தில் மாறி இருந்தால் அவர்கள் அதிகாரியிடம் தெரிவிக்கலாம்

தொகுதி மாறி இருந்தால் அவர்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது

◆ மீண்டும் ஆட்சேபனை காலமான டிசம்பர் 9ந் தேதி முதல் ஜனவரி மாதம் 8ந் தேதிக்குள் முகவரி மாற்றத்திற்கான மனு மற்றும் அதற்கான ஆவணங் களை இணைத்து தரவேண்டும்.

### பெற்றோர்கள் சொந்த ஊரில் இருப்பார்கள். பிள்ளைகள் நகரங்களில் பணியாற்றுவார்கள். ஆனால் சொந்த ஊரில் தான் வாக்காளர் அடையாள அட்டை எண் இருக்கும். அவர்கள் என்ன செய்ய வேண்டும்.?

அதில் எந்த பிரச்சினையும் இல்லை. வீட்டில் கொடுக்கப்படும் அந்த கணக்கெடுப்பு படிவத்தை பிள்ளைகளுக்கு பதில் அவர்கள் பெற்றோர்களே பூர்த்தி செய்து கொடுத்தால் போதும்.

ஆனால் நகரத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் பிள்ளைகள் பெயர் இருக்கக்கூடாது.

அப்படி இரட்டை (Double Entry) பதிவு இருந்தால் ஒரு இடத்தில் மட்டுமே கணக்கெடுப்பு படிவத்தை கொடுக்க வேண்டும்.

### தகுதியுள்ள ஒரு வாக்காளரை பட்டியலில் இருந்து நீக்கிவிட முடியுமா?

பதில்: இந்த வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த பணியில் ""மாநில அரசு ஊழியர்கள்"" மற்றும் ""அரசியல் கட்சி முகவர்கள்"" இணைந்து பணியாற்ற உள்ளனர். தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரையும் யாரும் நீக்க முடியாது.

# உச்ச நீதிமன்றத்தில் திமுக வழக்கு

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை ரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் திமுக வழக்கு தொடர்ந்துள்ளது. இதுதொடர்பாக திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் விவேக் சிங் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அறிவித்த இந்திய தேர்தல் ஆணையத்தின் அக்டோபர் 27ம் தேதியிட்ட அறிக்கை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளையும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தையும் மீறுவதாக உள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை ரத்து செய்யாவிட்டால், லட்சக்கணக்கானோர் வாக்குரிமையை இழக்க நேரிட்டு, அரசமைப்பு சாசனத்தின் அடிப்படையாக உள்ள நியாயமான, நேர்மையான தேர்தல் நடத்துவது நமது ஜனநாயக நாட்டில் கேள்விக்குள்ளாகும்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த நடவடிக்கைக்கான காரணங்களை தேர்தல் ஆணையம் அதன் அறிவிப்பில் தெரிவிக்கவில்லை. எனவே, தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை அறிவித்த தேர்தல் ஆணையத்தின் அக்டோபர் 27ம் தேதியிட்ட அறிக்கையை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

பணி சிறப்பாக நடக்கும் என ஆணையம் உறுதி: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்), சட்டத்துக்கு உட்பட்டு சிறப்பாக நடைபெறும் என்று உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் உறுதி அளித்துள்ளது. தியாகராய நகர், தாம்பரம் சட்டப்பேரவை தொகுதி வாக்காளர் பட்டியல் குளறு படிகளை சரிசெய்து, தகுதியற்றவர்களின் பெயர்களை நீக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி, தியாகராய நகர் அதிமுக முன்னாள் எம்எல்ஏ சத்தியநாராயணன், தாம்பரம் அதிமுக வழக்கறிஞர் விநாயகம் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

# வரைவு வாக்காளர் பட்டியல் டிச.9ம் தேதி வெளியிடப்படும்

தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, ஜி.அருள்முருகன் அமர்வில் இந்த வழக்குகள்நேற்று விசாரணைக்கு வந்தன.தேர்தல் ஆணையம் தரப்பில் வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபாலன் ஆஜராகி, “தமிழகத்தில் எஸ்ஐஆர் பணி நவ.4 (இன்று) தொடங்குகிறது. ஒவ்வொரு வாக்காளருக்கும் தனித்தனியாக படிவம் வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சரிபார்த்து, அதன் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் டிச.9 ம் தேதி வெளியிடப்படும். அதில் ஆட்சேபம் இருந்தால் கருத்தில் கொள்ளப்பட்டு, அதன்பிறகே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். ஏதேனும் பிழை இருந்தால், முழுமையாக களையப்பட்டு, யாரும் எதிர்பாராததைவிட ஒருபடி மேலே சென்று சட்டத்துக்கு உட்பட்டு இப்பணி சிறப்பாக நடத்தப்படும்” என்று உறுதி அளித்தார். இதை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், இதுதொடர்பான அனைத்து வழக்குகளையும் ஒன்றாக இணைத்து நவ.13 ம் தேதி பட்டியலிட பதிவுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளனர்.

ஒருவர் பெயரை நீக்கினால் அதற்கான காரணம், இறப்பு அல்லது முகவரியில் இல்லை என்பதனை தெளிவாக சொல்ல வேண்டும். இந்த விவரங்கள் ஊர் பலகைகளில் மக்களுக்கு அறிவிக்கப்படும்.

### இந்த பணி குறித்து மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை மக்கள் பெற்றுக்கொண்டு அதனை நிரப்பி திருப்பித்தர வேண்டும்.

ஒருவேளை தராவிட்டால் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து அவர்கள் பெயர் நீக்கப்படும்

அதேபோல முகவரி மாற்றம் செய்து இருந்தாலும் அவர்கள் பெயரும் பட்டியலில் இடம் பெறாது.

அவர்கள் அதற்கான காலத்தில் மனு கொடுத்து பட்டியலில் சேர்த்து கொள்ளலாம் தகுதியான யார் பெயரும் விடுப்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

### புதிய வாக்காளர்கள் இப்போது சேர முடியுமா?

கணக்கெடுப்பு படிவம் கொடுத்து பெறும் பணியின் போது 18 வயது ஆன புதிய வாக்காளர்கள் சேர்க்கை மட்டும் நடக்கும்.

அதற்காக வாக்காளர்கள் தங்கள் பெற்றோர் வாக்காளர் எண்ணை கொடுத்து உறுதிமொழி ஆவணம் மற்றும் படிவம்6 கொடுத்தால் போதும்

எந்த ஆவணமும் தர தேவையில்லை. ஆனால் இவர்கள் பெயர் வரைவு பட்டியலில் இடம் பெறாது. ஆட்சேபனை காலத்தில் இந்த படிவம் ஆய்வு செய்யப்பட்டு தகுதி இருந்தால் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர முடியும்.

# எஸ்ஐஆர் பணிக்கு முழு ஒத்துழைப்பு



## அரசியல் கட்சிகளிடம் மாவட்ட தேர்தல் அதிகாரி வேண்டுகோள்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சென்னை: சென்னை மாவட்டத்தில் நடைபெறும் எஸ்ஐஆர் பணிக்கு, அரசியல் கட்சிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கான பணிகள் (எஸ்ஐஆர்) இன்று முதல் தமிழகம் முழுவதும் தொடங்குகின்றன. இதை முன்னிட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகம் சார்பில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனை கூட்டம், ரிப்பன் மாளிகையில், மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் திமுக, காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், அதிமுக, பாஜக, ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இதில் சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளில் வீடு வீடாக தேர்தல் அதிகாரிகள், வாக்குச்சாவடி அலுவலர்கள் மேற்கொள்ள இருக்கும் பணிகள், தொடர்பாக விளக்கப்பட்டது. கூட்டத்தில் பேசிய மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன், இந்த எஸ்ஐஆர் பணிக்கு அரசியல்கள் கட்சிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

பின்னர், அரசியல் கட்சிகளிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. அப்போது, ஒவ்வொரு கட்சி சார்பில், 2 பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அதிமுக சார்பில் 4 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அதற்கு திமுக உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கவே, அதிமுகவை சேர்ந்த மாவட்ட

செயலாளர்கள் ஆர்.எஸ். ராஜேஷ், விருகை ரவி ஆகியோர் வெளியேறினர். தி.நகர் சத்யா, பாலகங்கா ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டம் முடிந்த பின், செய்தியாளர்களிடம் பேசிய திமுக மாநில சட்டத்துறை துணை செயலாளர் கே.சந்துரு, "எந்த ஒரு புரிதலும் இல்லாமல் தமிழகத்தில் நுழைய வேண்டும் என்பதற்காக, பாஜக அரசு தேர்தல் ஆணையத்தை கைப்பாவையாக மாற்றி உள்ளது" என தெரிவித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் ஜி.செல்வா பேசும் போது, ஜனநாயகத்துக்கு எதிரான முறையில் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தை பறிக்கக் கூடிய வேலையில் பாஜக அரசு செயல்படுகிறது. எஸ்ஐஆர்ஐ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முழுவதுமாக எதிர்க்கிறது. மிகப் பெரிய சிக்கலை தேர்தல் ஆணையம் உருவாக்கியுள்ளது. அது மிகப்பெரிய கண்டனத்துக்குரியது" என்றார். அதனைத் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியின் வழக்கறிஞர் அணி துணைத் தலைவர் நவாஸ் பேசும்போது, காங்கிரஸ் கட்சி சார்பில் எஸ்ஐஆர்க்கு எங்கள் கண்டனங்களை தெரிவித்துக் கொண்டோம்.

நடைமுறை சாத்தியமில்லாத வேலையை பாஜகவும், தேர்தல் ஆணையமும், தமிழகத்தில் நடக்க உள்ள சட்டப்பேரவை தேர்தலை சீர்குலைக்கும் வகையில் செயல்படுகிறது. தேர்தல் ஆணையம் உள்நோக்கத்தோடு செயல்படுகிறது என்றார். அதிமுக மாவட்ட செயலாளர் விருகை ரவி பேசும்போது, எஸ்ஐஆர்ஐ அதிமுக முழுமையாக ஆதரிக்கிறது. வாழ்வாதாரத்துக்காக தமிழகம் வந்துள்ள வடமாநில தொழிலாளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதை அதிமுக ஏற்றுக் கொள்கிறது என்றார். ●

# திமுகவில் இணைந்தார் ஓபிஎஸ் ஆதரவாளர் மனோஜ் பாண்டியன் அதிமுக மீது சரமாரி குற்றச்சாட்டு



நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் எம்எல்ஏ ஆக இருப்பவர் மனோஜ் பாண்டியன். அதிமுக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர், ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளராக அறியப்படுகிறார்.

இந்நிலையில், நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏவும், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருமான மனோஜ் பாண்டியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். முன்னாள் சபாநாயகரும், அதிமுக மூத்த தலைவருமான மறைந்த பி.ஹெச் பாண்டியனின் மகன் மனோஜ் பாண்டியன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது, "திராவிட கொள்கைகளை பின்பற்றும் இயக்கமான திமுகவில் இணைந்துள்ளேன்; தமிழக உரிமைகளை அடகு வைக்காத தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். தொண்டர்களின் உழைப்பை அங்கீகரிக்காதவர் எடப்பாடி பழனிசாமி. பாஜகவுடன் எந்தவொரு காலத்திலும் கூட்டணி வைக்க மாட்டேன் என்று கூறிவிட்டு தற்போது எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தார் என்று தெரியவில்லை. இது குறித்து இன்று வரை பதில் இல்லை. எந்த கொள்கைக்காக இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதோ, அது காற்றில் விடப்பட்டுள்ளது.

அதிமுகவை தோற்றுவித்த தலைவரும், அதற்குப் பின்னால் அந்த இயக்கத்தை பாதுகாத்து வளர்த்த ஜெயலலிதாவும் எந்தச் சூழ்நிலையிலும் அதிமுகவை யாருக்கும் அடகு வைக்கவில்லை. அவர்கள் காலத்தில் இருந்த அதிமுக தற்போது இல்லை. இன்றைய அதிமுக என்பது வேறு. மற்ற இயக்கத்தை நம்பி ,அவர்களின் சொல்படி நடக்கிறது. பாஜகவின் கிளைக் கழகமாக அதிமுக செயல்படுகிறது. இன்று மாலை 4 மணிக்கு எனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்ய இருக்கிறேன்" என்று அவர் தெரிவித்தார். ●

# பனையூர் அலுவலகத்துக்கு சென்ற சிபிஐ அதிகாரிகள்

## பிரச்சார வாகன கேமரா பதிவுகளை கேட்டு சம்மன்

கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக தவெக அலுவலகம் அமைந்துள்ள பனையூருக்கு சிபிஐ அதிகாரிகள் 3 பேர் நேற்று சென்றனர். அப்போது பிரச்சார வாகன கேமரா பதிவுகளைக் கேட்டு சம்மன் கொடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப் .27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இவ்வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் கடை வைத்துள்ள வியாபாரிகள், நேரடி சாட்சிகள், பல்வேறு துறை அதிகாரிகள் என இதுவரை மொத்தம் 306 பேருக்கு சம்மன் அனுப்பி, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, நேற்று முன்தினம் வேலுசாமிபுரத்தைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட வியாபாரிகளிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து, கரூர் சுற்றுலா மாளிகையில் நேற்று 2வது நாளாக வேலுசாமிபுரத்தில் பேக்கரி வைத்திருப்பவர், கேட்டரிங் கல்லூரி வைத்திருப்பவர் உள்ளிட்ட சம்மன் அனுப்பப்பட்ட 10க்கும் மேற்பட்டவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இதற்கிடையே, கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்1 மாஜிஸ்திரேட் பரத்குமாரை சிபிஐ அதிகாரிகள் சந்தித்தனர். 3 பேர் அடங்கிய குழு கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கியுள்ள சிபிஐ அதிகாரிகள், ஆதவ் அர்ஜுனாவின் 'வாய்ஸ் ஆஃப் காமன்' அமைப்பில் பணியாற்றி வரும், கரூர் காமராஜபுரம் என்ற முகவரியைச் சேர்ந்த ராம்குமார் என்பவரிடம் விசாரணை நடத்த நேற்று முன்தினம் சென்றனர்.

அப்போது, அவர் சென்னையில் இருப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில் சிபிஐ இன்ஸ்பெக்டர் பெனிக் தலைமையில் 3 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

சென்னை பனையூரில் உள்ள தவெகவின் அலுவலகத்துக்கு நேற்று சென்ற சிபிஐ அதிகாரிகள், விஜய்யின் பிரச்சார வாகனத்தில் உள்ள கேமரா பதிவுகள் மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களின் விவரங்களை அளிக்குமாறு இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமாரிடம் கேட்டு சம்மன் கொடுத்ததாகவும், அவற்றை 3 நாட்களில் அளிப்பதாக அவர் கூறியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும், ராம்குமார் எங்கு உள்ளார் என்ற விவரத்தையும் அவரிடம் கேட்டதாகத் தெரிகிறது. நிர்மல்குமார் அளித்த தகவலின் அடிப்படையில் ராம்குமாரிடம் விசாரணை நடத்த சிபிஐ அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.



## தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி

# மகுடம் சூடியது இந்திய மகளிர் அணி

நடப்பு மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணியை 52 ரன்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது இந்திய கிரிக்கெட் அணி. இந்தப் போட்டியில் 58 ரன்கள் மற்றும் 5 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தி இருந்தார் இந்தியாவின் தீப்தி சர்மா.

நவி மும்பையில் உள்ள டி.ஒய் பாட்டீல் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 299 ரன்கள் என்ற இலக்கை தென் ஆப்பிரிக்க அணி விரட்டியது. அந்த அணிக்காக கேப்டன் லாரா வோல்வார்ட் மற்றும் டாஸ்மின் பிரிட்ஸ் இணை ந்து இன்னிங்ஸை தொடங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 51 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர்.

23 ரன்களில் ரன் அவுட் ஆனார் பிரிட்ஸ். பீல்டிங்கில் அமன்ஜோத் அபாரமாக செயல்பட்டு ஸ்டம்பு களை தகர்த்தார். அன்னேக்கே போஷ் ரன் ஏதும் எடுக்காமல் ஸ்ரீ ஷரணி பந்தில் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் சுனே லுஸ் உடன் இணைந்து 52 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தார் லாரா. அந்த கூட்டணியை ஷபாலி பிரித்தார். தொடர்ந்து வந்த மரிசான் காப் விக்கெட்டையும் ஷபாலி கைப்பற்றினார்.

அன்னேரி டெர்க்சன் மற்றும் லாரா இணைந்து 6வது விக்கெட்டுக்கு 61 ரன்கள் சேர்த்தனர். ஆட்டத்தின் முக்கிய கட்டத்தில் அந்த கூட்டணியை பிரித்தார் தீப்தி. அன்னேரி டெர்க்சனை அவர் போல்ட் செய்தார். சதம் கடந்து இந்தியாவின் வெற்றிக்கு தடையாக நின்ற லாரா வோல்வார்ட் விக்கெட்டை அதற்கடுத்து வீசிய ஓவரில் தீப்தி வீழ்த்தினார். அவர் 98 பந்துகளில் 101 ரன்கள் எடுத்திருந்தார். பெரிய






ஷாட் ஆட முயன்றார் லாரா. ஆனால், பந்து அமன்ஜோத் வசம் தஞ்சமானது. பந்தை தட்டி தட்டி பிடித்திருந்தார் அமன்ஜோத். அதே ஓவரில் குளோ டிரையானை எல்பிடபிள்யூ முறையில் தீப்தி வெளியேற்றினார். அயபோங்கா காக்கா 1 ரன்னில் ரன் அவுட் ஆனார்.

தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. நடின் டி கிளர்க் 18 ரன்களில் ஆட்டமிழந்தார். 9.3 ஓவர்கள் வீசி, 39 ரன்கள் கொடுத்து, 5 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார் தீப்தி. ஷபாலி 2, ஸ்ரீ ஷரணி 1 விக்கெட் வீழ்த்தினர். இதன் மூலம் இந்திய அணி 52 ரன்களில் வெற்றி பெற்று உலக கோப்பையை முதல் முறையாக வென்றது.முன்னதாக, இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் விளையாடிய இந்திய அணிக்காக ஷபாலி வர்மா மற்றும் ஸ்மிருதி மந்தனா இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 104 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர். முதல் 10 ஓவர்களில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி ரன் குவித்தது. அதற்கடுத்த சில ஓவர்களில் பவுண்டரி பதிவு செய்ய முடியாத வகையில் தென் ஆப்பிரிக்க வீராங்கனைகள் பந்து வீசி இருந்தனர்.

ஸ்மிருதி மந்தனா 58 பந்துகளில் 45 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் களத்துக்கு வந்த ஜெமிமா ரோட்ரிக்ஸ் உடன் இணைந்து 62 ரன்கள் கூட்டணி அமைத்தார் ஷபாலி. 78 பந்துகளில் 87 ரன்கள் அவர் ஆட்டம் இழந்தார். ஜெமிமா 24 ரன்களிலும், கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 20 ரன்களிலும், அமன்ஜோத் கவுர் 12 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இருப்பினும் மறுமுனையில் தீப்தி சர்மாவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. தென் ஆப்பிரிக்க அணியினர் தவறவிட்ட கேட்ச் வாய்ப்பை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

6வது விக்கெட்டுக்கு 47 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தனர் தீப்தி சர்மாவும், ரிச்சா கோஷும். 24 பந்துகளில் 34 ரன்கள் எடுத்து ரிச்சா ஆட்டமிழந்தார். தீப்தி 58 ரன்கள் எடுத்து கடைசி பந்தில் ரன் அவுட் ஆனார். ராதா யாதவ் 3 ரன்கள் எடுத்திருந்தார். இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 298 ரன்கள் எடுத்தது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அயபோங்கா காக்கா 3 விக்கெட் வீழ்த்தினார். லாபா, குளோ டிரையான், நடின் டி கிளர்க் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.



# எடப்பாடிக்கு எதிராக அணிதிரண்ட அதிமுக அதிருப்தி தலைவர்கள்

## பசும்பொன்னில் சசிகலா, ஓ.பி.எஸ், டிடிவி, செங்கோட்டையன் ஆலோசனை



எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான அதிமுக அதிருப்தி தலைவர்கள் அணி திரண்டுள்ளனர். பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் சசிகலா, ஓபிஎஸ், செங்கோட்டையன், டிடிவி.தினகரன் ஆகியோர் சந்தித்து பேசினர். இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா மறைந்த பின்னர், சசிகலா மற்றும் டிடிவி.தினகரனுக்கு எதிராக ஓ.பன்னீர்செல்வம் கடந்த 2017ல் ஜெயலலிதா சமாதி முன்பு தர்மயுத்தம் தொடங்கினார்.

இதன்பிறகு, ஊழல் வழக்கில் சசிகலாவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், சசிகலா, டிடிவி.தினகரன் ஆதரவுடன் எடப்பாடி பழனிசாமி முதல்வராக பொறுப்பேற்றார். அப்போதைய கவர்னர் வித்யாசாகர் தலையிட்டு எடப்பாடி மற்றும் ஓபிஎஸ் இடையே சமாதானம் செய்து வைத்தார். இதனால் ஓபிஎஸ் துணை முதல்வரானார். 2021 சட்டமன்ற தேர்தலில் அதிமுக தோல்வி அடைந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள தீவிரம் காட்டினார். இதனால், இருவரிடையே பிளவு ஏற்பட்டு ஓபிஎஸ் பிரிந்தார்.

ஏற்கனவே, டிடிவி.தினகரன் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அமமுக என்ற தனி கட்சியை நடத்தி வரும் நிலையில், எடப்பாடிக்கு எதிராக டிடிவி, ஓபிஎஸ் மற்றும் சசிகலா உள்ளிட்டோர் தனித்தனி அணியாக செயல்பட்டு வந்தனர். ஓபிஎஸ் மற்றும் சசிகலா தரப்பில் அதிமுகவில் உள்ள அணிகள் ஒன்றிணைந்து ஒரே அணியாக செயல்பட வேண்டுமென தொடர்ந்து கூறி வருகின்றனர். டிடிவியோ எடப்பாடி இல்லாத அதிமுக என்பதில் உறுதியாக இருந்து வருகிறார்.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள

சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி, சசிகலா, டிடிவி மற்றும் ஓபிஎஸ் உள்ளிட்ட அனைவரையும் ஒரே அணியின் கீழ் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் தேர்தல் தங்களுக்கு சாதகமாக இருக்கும் என பாஜ எண்ணி காய் நகர்த்தியது. ஆனால், மூவரை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்தால் தனது பதவி நிலைக்காது என எண்ணிய எடப்பாடி, இவர்களை சேர்ப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். ஒரு கட்டத்தில் எடப்பாடியின் முடிவிற்கு பாஜ தரப்பில் கிரீன் சிக்னல் கிடைத்தது.

பலமுறை தமிழ்நாட்டிற்கு வந்த உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஓபிஎஸ் மற்றும் டிடிவியை சந்திப்பதை தவிர்த்தார். பலமுறை முயற்சித்தும் பலன் கிடைக்காத நிலையில் ஓபிஎஸ் திடீரென தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இவரைத் தொடர்ந்து, டிடிவியும் தேஜ கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இருவரின் அறிவிப்பு எடப்பாடிக்கு மகிழ்ச்சியை கொடுத்த நிலையில், அதிமுகவின் மூத்த தலைவர் செங்கோட்டையன் திடீரென அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற தலைவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கி, எடப்பாடிக்கு கெடு விதித்தார்.

செங்கோட்டையனின் இந்த கருத்தை சசிகலா, டிடிவி.தினகரன் மற்றும் ஓபிஎஸ் உள்ளிட்டோர் வரவேற்றனர். செங்கோட்டையனின் அறிவிப்பு அதிமுகவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, செங்கோட்டையனின் கட்சி பதவிகளை எடப்படி அதிரடியாக பறித்தார். மேலும், அவரது ஆதரவாளர்களின் பதவியை பறித்ததோடு கட்சியில் இருந்தும் சஸ்பெண்ட் செய்தார். 2 பேரை கட்சியை விட்டு டிஸ்மிஸ் செய்தார். அதிமுகவை ஒருங்கிணைப்பது குறித்து செங்கோட்டையனை விரைவில் சந்திப்பேன் என்று ஓபிஎஸ் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக செங்கோட்டையனிடமும் ஓபிஎஸ் தொலைபேசியில் பேசினார். எடப்படிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய செங்கோட்டையனை கோபியில் உள்ள அவரது வீட்டில் தினமும் ஏராளமான டிடிவி, ஓபிஎஸ், சசிகலா ஆதரவாளர்கள் சந்தித்து ஆதரவு தெரிவித்து வந்தனர். டிடிவியும் ஓபிஎஸ், செங்கோட்டையனை தேவைப்பட்டால் சந்திபேன் என்று தெரிவித்திருந்தார். இந்த சூழலில், இவர்களை ஒருங்கிணைக்க பாஜ டெல்லி மேலிடம் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இதற்காக செங்கோட்டையனை டெல்லிக்கு வரவழைத்து, அதிமுக ஒன்றிணைப்பு தொடர்பாக ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, நிர்மலா சீதாராமன் ஆகியோர் சந்தித்து பேசினர். இதைத்தொடர்ந்து, எடப்பாடி டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்து பேசினார். அப்போது, அதிமுகவில் இருந்து பிரிந்து சென்ற தலைவர்களை சேர்க்க எதிர்ப்பு தெரிவித்தார். இதனால், டிடிவி, ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன்

## பசும்பொன்னில் உருவான எங்கள் கூட்டணி தொடரும்: ஓபிஎஸ் சபதம்

பசும்பொன்னில் ஓபிஎஸ், செங்கோட்டையன், டிடிவி தினகரன் கூட்டாக பேட்டியளித்தனர். ஓபிஎஸ் கூறுகையில், ‘‘பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சன்னதியில் ஜெயலலிதாவின் ஆட்சி, எம்ஜிஆரின் ஆட்சி மீண்டும் உருவாக நாங்கள் சபதம் மேற்கொண்டுள்ளோம். எங்களோடு டிடிவி.தினகரன், செங்கோட்டையன் ஆகியோரும் வந்துள்ளனர். நாங்கள் இணைந்து செயல்படுவோம். பசும்பொன்னில் உருவான இந்த கூட்டணி தொடரும்’’ என்றார். இதைத்தொடர்ந்து, மதுரை அருகே கப்பலூர் தனியார் உணவு விடுதியில் செய்தியாளர்களை சந்தித்த ஓபிஎஸ்சிடம் ‘‘2021ல் துரோகிகளால் தான் அதிமுக தோல்வியடைந்ததாக இபிஎஸ் கூறியுள்ளாரே’’ என்ற கேள்விக்கு ஓபிஎஸ், ‘‘யாரால் தோல்வியடைந்தோம் என்பது மக்களுக்கு தெரியும்’’ என பதில் அளித்தார்.

## எடப்பாடிதான் எதிரி அவரை வீழ்த்துவோம்: டிடிவி திட்டவட்டம்

டிடிவி.தினகரன் கூறுகையில், ‘‘எம்ஜிஆர் கால மூத்த நிர்வாகியான செங்கோட்டையனும் இப்போது எங்களுடன் வந்திருக்கிறார். ஜெயலலிதா, பசும்பொன்னுக்கு வருவதற்கு முன்பு ஓபிஎஸ், செங்கோட்டையன் போன்றவர்கள் முன்னதாக வந்திருந்து அதற்கான ஏற்பாடுகளை செய்வார்கள். தற்போது ஜெயலலிதாவின் தொண்டர்களை காப்பதற்காக எங்களோடு அவரும் வந்திருக்கிறார். மீண்டும் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆட்சி அமைவதற்கு செங்கோட்டையன், ஓபிஎஸ் ஆகியோருடன் சேர்ந்து பணியாற்ற இருக்கிறோம்’’ என்றார்.

‘‘எடப்பாடிக்கு எதுவும் சொல்ல விரும்புகிறீர்களா’’ என கேட்டதற்கு, ‘‘துரோகத்தை வீழ்த்தும் வரை நாங்கள் தொடர்வோம்’’ என்றார். ‘‘செங்கோட்டையன் இன்னும் அதிமுகவில் தானே இருக்கிறார்’’ என்ற கேள்விக்கு,‘‘செங்கோட்டையன் ஏற்கனவே இங்கு வருவதாக கூறினார். தற்போது வந்துவிட்டார். அதிமுக எங்களுக்கு எதிரி கிடையாது. எடப்பாடி மட்டும் தான் எங்களுக்கு எதிரானவர். ஜெயலலிதாவின் தொண்டர்களாக நாங்கள் ஒன்றிணைந்து இருக்கிறோம்’’ என்றார்.

## எத்தனை பேரை நீக்குவார் என்று பார்ப்போம்: சசிகலா சவால்

மதுரையில் சசிகலா நேற்று மாலை அளித்த பேட்டி: அதிமுகவை ஒன்றிணைப்பதை நான் நிச்சயமாக செய்வேன். சர்ப்ரைசாக எல்லாமே நடக்கும். வெயிட் அன்ட் சீ. பொறுத்திருந்து பாருங்கள். அதிமுக ஆட்சியை மீண்டும் கொண்டு வருவேன். செங்கோட்டையன் மீது நடவடிக்கை எடுப்பேன் என எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். யார் என்ன நடவடிக்கை எடுத்தாலும் நான் எல்லோரையும் சந்திப்பேன். பார்ப்போம் எத்தனை பேரைத்தான் கட்சியில் இருந்து அவர் நீக்க முடியுமென்று. எம்ஜிஆரின் மறைவில் இருந்து கட்சியை பார்த்து கொண்டுள்ளேன்.

பழைய நிலை அதிமுகவில் திரும்பும். இரண்டாவது முறையாக கட்சியில் ஏற்பட்டுள்ள இப்பிரச்னையை நிச்சயம் சரி செய்வேன். 2021ல் துரோகிளால் தோற்றோம் என எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறார். யார் துரோகி என அதிமுகவின் அடிமட்ட தொண்டர்களிடம் போய் கேட்டால் தெரியும். நான் கட்சியை ஒன்றிணைக்கும் பணியை ஆரம்பத்திலேயே தொடங்கி விட்டேன். அரசியலில் எடுத்தோம் கவிழ்த்தோம் என செய்வது என் பழக்கம் இல்லை. என்னை பற்றி சீனியர் லீடர்களுக்கு தெரியும். எப்படி டீல் செய்வேன் எனத் தெரியும். இப்போது இருப்பவர்கள் போல நானும், ஜெயலலிதாவும் ஸ்பூன் பீடிங்கில் வந்தவர்கள் இல்லை. தலைவர் மறைவு, அதன் பின்பு அதிமுக இக்கட்டான காலகட்டத்தில் இருந்த போது ஜெயலலிதாவை திட்டியவர்கள், எதிர்த்தவர்களை கூட நாங்கள் அமைச்சர்களாகவும், சபாநாயகர்களாகவும் ஆக்கி உள்ளோம். என்னுடைய மூவ் தனியாக தான் இருக்கும்.இவ்வாறு தெரிவித்தார்.

ஆகியோர் எப்போது வேண்டுமானாலும் ஒன்றாக சந்திக்கலாம் என எதிர்பார்ப்பு எழுந்தது.

இந்நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் இரவு மதுரை வந்த ஓபிஎஸ், அழகர்கோவில் சாலையிலுள்ள தனியார் ஓட்டலில் தங்கியிருந்தார். இந்த ஓட்டலுக்கு நேற்று காலை வந்த செங்கோட்டையன், ஓபிஎஸ் அறைக்கு சென்று அவரை சந்தித்தார். அப்போது செங்கோட்டையன் ஓபிஎஸ்சிற்கு சால்வை அணிவித்தார். செங்கோட்டையனுக்கு ஓபிஎஸ்சும் அவரது ஆதரவாளர்களும் சால்வை அணிவித்தனர். பசும்பொன் செல்வதற்காக நேற்று முன்தினம் இரவே மதுரை வந்திருந்த அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரனும், கோச்சடை பகுதியில் வழக்கமாக தங்கும் தனியார் ஓட்டலில் தங்கியிருந்தார்.

ஓபிஎஸ்சை செங்கோட்டையன் வந்து பார்த்ததும், அங்கிருந்தபடி தனி அறைக்கு சென்ற இருவரும் டிடிவி.தினகரனை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினர். அப்போது பசும்பொன் செல்லும் வழியில் இடையில் மூவரும் ஒன்றாக சந்திக்கலாம் என டிடிவி.தினகரன் கூறியுள்ளார். இதைத்தொடர்ந்து நேற்று காலை ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன் ஆகியோர் ஒரே காரில் பசும்பொன் கிளம்பினர். காரின் முன் சீட்டில் ஓபிஎஸ் உட்கார்ந்திருக்க, பின் சீட்டில் செங்கோட்டையன் மற்றும் மாஜி எம்பி சையதுகான் ஆகியோர் பசும்பொன் கிளம்பிச் சென்றனர்.

இவர்களது கார் சிவகங்கை மாவட்ட எல்லையான திருப்புவனம் பகுதிக்கு சென்றதும், இவர்களது ஆதரவாளர்கள் தரப்பில் அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது, திறந்த வேனில் ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன் நின்றவாறு ஆதரவாளர்களிடம் கையசைத்தவாறு சென்றனர். இருவரும் பசும்பொன் செல்லும் வழியில் அபிராமம் நெடுங்குளம் பகுதிக்கு சென்றதும் வேனில் இருந்து இறங்கி காருக்குள் சென்று டிடிவி.தினகரன் வருகைக்காக காத்திருந்தனர். அரைமணி நேரத்திற்கும் மேல் காத்திருந்த நிலையில், டிடிவி.தினகரன் தனது வேனில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அப்போது ஓபிஎஸ், செங்கோட்டையன் ஆகியோர் காரில் இருந்து இறங்கினர். டிடிவி. தினகரன் வேனில் இருந்து இறங்கினார். மூவரும் ஒன்றாக சந்தித்து கொண்டனர். சிறிது நேரம் பேசிவிட்டு பசும்பொன்னுக்கு கிளம்பினர். அப்போது அங்கு திரண்டிருந்த ஆதரவாளர்கள் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக கோஷமிட்டனர். இதைத் தொடர்ந்து பசும்பொன் சென்றதும் மூன்று பேரும் ஒன்றாக சேர்ந்து பசும்பொன் நினைவாலயத்திற்கு சென்று தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்தனர்.

இதைத்தொடர்ந்து ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன் ஆகியோர் பசும்பொன்னில் உள்ள தேவரின் நினைவு இல்லத்தில் காத்திருந்தனர். சிறிது நேரத்திற்கு பிறகு அங்கு சசிகலா வந்தார். நினைவிடத்தில் இருந்து வெளியே வந்த சசிகலாவை வரவேற்ற ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன் சந்தித்து பேசினர். சுமார் அரைமணி நேரம் மூவரும் தனியாக பேசிக்கொண்டிருந்தனர். இதைத் தொடர்ந்து சசிகலா கிளம்பி சென்றார்.

அதன்பின் ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையனும் கிளம்பி சென்றனர். கட்சியில் அனைவரும் ஒருங்கிணைய வேண்டுமென செங்கோட்டையனும், ஏற்கனவே பிரிந்து சென்ற சசிகலா, டிடிவி மற்றும் ஓபிஎஸ் உள்ளிட்டோர் தொடர்ந்து கூறிவரும் நிலையில் பசும்பொன்னில் சசிகலா, டிடிவியுடன் ஓபிஎஸ் மற்றும் செங்கோட்டையன் சந்தித்து பேசியது அதிமுகவில் மட்டுமின்றி, தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ●

## சசிகலாவை புறக்கணித்த டிடிவி

பசும்பொனில் ஓபிஎஸ், டிடிவி, செங்கோட்டையன் ஆகியோர் சந்தித்துக் கொண்ட நிலையில், மூவரும் சசிகலாவை சந்திப்பார்கள் என கூறப்பட்டது. ஆனால், சசிகலா வர தாமதமானதால் ஓபிஎஸ், செங்கோட்டையன் மட்டும் அவரை காத்திருந்து சந்தித்தனர். டிடிவி புறப்பட்டு சென்றுவிட்டார். ஏற்கனவே, சசிகலாடிடிவி இடையே கருத்து வேறுபாடு நிலவுவதால் இருவரும் சந்திப்பை தவிர்த்து வருகின்றனர். இதன் காரணமாகவே, நேற்றும் சசிகலாவை டிடிவி சந்திக்காமல் புறக்கணித்து சென்றுவிட்டார்.

## பழைய நண்பர்கள் அப்படிதான் இருப்பாங்க... நயினார் மழுப்பல்

தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் அளித்த பேட்டியில், ஓபிஎஸ், செங்கோட்டையன் பழைய நண்பர்கள் என்பதால் பசும்பொன்னுக்கு ஒரே காரில் பயணம் செய்திருப்பார்கள். இதேபோல் எடப்பாடி பழனிசாமி மற்றும் தவெக புஸ்ஸிஆனந்த் ஆகியோர் தனித்தனி விமானங்களில் பயணிக்க முடியாது என்பதால் ஒரே விமானத்தில் சென்றிருப்பார்கள் என்றார்.

## பசும்பொன்னில் கூடியது ஏன்?

அதிமுக எடப்பாடி கட்டுப்பாட்டின் கீழ் வந்ததும், கட்சி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு ஆதரவாகவும், குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திற்கு எதிராகவும் இருப்பதாக அதிமுகவில் பேச்சு எழுந்துள்ளது. இதனால், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரின் ஆதரவு இல்லாததால் இந்தப் பகுதியில் அதிமுகவிற்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அதே நேரம் தென்மாவட்டங்களில் போட்டியிட்ட ஓபிஎஸ் மற்றும் டிடிவி ஆகியோர் கணிசமான வாக்குகளை பெற்றனர். இதன்மூலம் தென்மாவட்டங்களில் குறிப்பிட்ட சமுதாயத்தினரின் ஆதரவு தங்களுக்கு இருப்பதாக ஓபிஎஸ் மற்றும் டிடிவி ஆகியோர் கூறி வந்தனர். இதை பொதுவெளியில் காட்டும் வகையிலும், குறிப்பிட்ட சமுதாயம் எடப்பாடி தலைமைக்கு எதிராக இருப்பதை காட்டும் நோக்கிலும் எடப்பாடிக்கு எதிரான 4 பேரும் பசும்பொன்னில் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## 8 ஆண்டுக்கு பின் சசிகலாவுடன் சந்திப்பு

முத்துராமலிங்கத் தேவர் நினைவாலயத்திற்கு பிரதான கேட் வழியாக வந்த சசிகலா, முத்தராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சிறிது நேரம் தரையில் அமர்ந்து தியானம் செய்தார். தொடர்ந்து அறங்காவலர் காந்தி மீனாளை சந்தித்து நலம் விசாரித்தார்.

அப்போது நினைவு இல்லத்தில் இருந்து வெளியே வந்த சசிகலாவை, வெளியே சென்ற ஓபிஎஸ், செங்கோட்டையன் மீண்டும் வந்து வணக்கம் செலுத்தி சந்தித்தனர். சுமார் 8 ஆண்டுகளுக்கு பிறகு சசிகலாவை, செங்கோட்டையன், ஓபிஎஸ் ஆகியோர் வெளிப்படையாக நேருக்கு நேர் சந்தித்ததால் அங்கிருந்த ஆதரவாளர்கள், தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர்.



# மனிதநேயம் வாழ்க



உடைமையும் இளந்து உரிமையும் இளந்து கடமையையும் மரந்தூ பையில் இருந்த பணம் இளந்து செய்யும் வேலையையும் ம ரந்துமது என்னும் போதையில் போய் கண்ட கண்ட இடங்களில் மனிதர்கள் கலைப்பாரும் மனிதன் நிலைமை குடி என்னும் கெட்ட பழக்கத்தால் தான் கெட்டுப் போகாத மனிதனும் கெட்டுப் போகிறான் போதை என்னும் பாதையில் போவதால் இளைஞர் களின் இளமை வாழ்க்கை மோசமான பாதையில் போய் மதுவை மகிழ்ந்து அருந்தி விட்டு மதுவை மறக்க முடியாத மனநிலையில் வாழ்க்கை என்னும் பாதையை மறந்து போதை என்னும் பாதையில் போய் பிறர் மதிக்காத நிலைமைக்கு தள்ளப்படுகிறான்.

உடல் வலிக்க உழைத்து வலி மறக்கமன நிம்மதி என்னும் ஒரு பொய்யை தேடி மது என்னும் போதையில் கலைப்பு அர்வதாக நினைத்து குடி என்னும் குடியை மருந்தாக அருந்துகிறான்.

இதனால் அவர்களால் மீண்டும் திறமை மிக்கவனாக உழைக்க இயலவில்லை அதனால் அவரை நம்பி வாழும் குடும்பம் வறுமையை தேடும் நிலைமை ஆகிறது.

இதெல்லாம் சீராகும் என்பது சந்தேகம் தான் நம்பிக்கையே வாழ்க்கை என்பார்கள் அது போல் மதுவை மறந்து விடு உன் உழைப்பை நம்பு உனக்கு உருதுணையாக இருக்கும் என்பதையும் நம்பு உன் குடும்பத்தையும் நம்பு மது என்னும் மாய வலையில் விழாதே...

விலை உயர்ந்த உன் வாழ்க்கையை இன்னும் உயர்த்தி காட்டு மது என்னும் மயக்கத்தில் விழுந்தவனும் மீண்டு வர வேண்டும் மனிதன் மனிதனாக நல்வழியில் வரவேண்டும். நல் வழியில்வாழ வேண்டும். நல்வழியில் வந்துமீண்டும்... பாராட்டுகள் பெற வேண்டும்....

மதுவும் வேண்டாம் புகையும் வேண்டாம் மற்றவர்களிடம் பகையும் வேண்டாம்மனிதனை மனிதனாக வாழ்ந்து காட்டு மனிதநேயம் வாழ்க... ●

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street,
Bharathiyar Nagar,
Koyambedu Market Road,

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்

இதை பார்த்த அவன் அப்பா என்றான் வாடா வா நான் உன்கிட்ட அவுட்டா இல்ல நீ என்கிட்ட அவுட்டா என்று பார்க்கலாம்டா இவ்ளோ நேரம் விளையாண்டு தண்ணில கிடந்துகிட்டு எண்ணிய பிடிச்சுட்டு அவுட் நீ வேற கேக்குறியாடான்னு போடு போடுனு போட்டார் அடிய தண்ணிக்குள்ளே வைத்து அடித்தார்.

இதனால் பயந்து கரைக்கி ஓடினான் பக்ரி என்ற இளைஞன் கரையில் ஓடினான் பக்கிரி அவன் அப்பா அவனை டேய் நில்லுடா ஓடாதடா நில்லுடா ஓடாதடா என்றார். அவன் தந்தை ராஜேந்திரன் கையில் வைத்திருந்த மாடு ஓட்டுவதற்காக வைத்திருந்த சாட்டையை எடுத்து விடிய காலையிலே இருந்து வீட்லயும் தோட்டத்தில் ஒரு வேலை எதுவும் செய்யாம ஏரில் குளிக்க வந்து இவ்வளவு நேரம் நீங்க குளிச்சி இருக்கீங்க அது




நம்ம ஊரு பெண்கள் மேல எல்லாம் தண்ணி அடிச்சே விளையாடி இருக்கீங்க என்னடா என்று கையில் வைத்திருந்த மாடு ஓட்டும் சாட்டை எடுத்து மீண்டும்அவர் மகனான பக்ரியே தாக்கினார் அவன் சத்தம் போட்டு கத்தினான் அப்பா அடிக்காதப்பா அடிக்காத அப்பா நான் ஒன்னும் அப்படி செய்யலப்பா நாங்கெல்லாம் அந்த பொண்ணுங்களை அவங்களை ஒன்னும் அப்படி செய்யலப்பா அப்பனா அப்போம்



எப்படிடா செஞ்சீங்க இப்படியும் செய்யல் அப்பா அப்படியும் செய்யலப்பா அப்பனா எப்படிடா செஞ்சீங்கடா இப்படியும் செய்யலன்னா அப்படியும் செய்யலன்னா எப்படிடா செஞ்சீங்க அந்த பொம்பள பிள்ளைங்க சொல்லுச்சு என்று அவன் தந்தை சொன்னார் கூட இருந்த இளைஞர்களையும் பார்த்து நீங்க எல்லாம் சேர்ந்து தானே அப்படி தண்ணி எல்லாம் அந்த பொம்பள பிள்ளைங்க மேல அடிச்சீங்களா அதெல்லாம்



ஒன்னும் இல்லப்பா அப்படி எல்லாம் நாங்க ஒன்னும் செய்யலப்பா நாங்க குளிக்க தான் போனோ அப்பா நாங்க வேணுக்கணி அப்படி செய்யலப்பா வேற எப்படிடா செஞ்சீங்க பொம்பள பிள்ளைங்க ஏதேதோ சொல்லுங்களே வேணுக்குனு நீ தண்ணி அவங்மே பட்டு இருக்காதுப்பா தெரியாம தான் அப்பா தன்னிப்பட்டு இருக்கும் அப்பா அப்படி செய்யல அப்பா அப்பா என்று பக்ரி கத்தினான் மீண்டும் மாடு ஓட்டும் சாட்டையால் தாக்கினார்.

பக்கிரியை பக்ரி ஆ அப்பா என்று கத்தினான் வலியால் அப்பா கண்ணுல படிச்சுப்பா கண்ணு வலிக்குதுப்பா கண்ணு தெரியலப்பா என்று கத்தினான் பக்கிரி இது அருகில் இருந்த இளைஞர்களின் காதுகளில் விழுந்தது இவன் கத்துவது இதை காதில் கேட்ட கூட இருந்த இளைஞர்கள் எல்லாம் ஓடிவந்து உங்க பையன் சொல்றதை நம்பாம அந்தப்



பொண்ணுங்க சொல்றதை நம்பி நீங்க உங்க பையனை இப்படி அடிக்கிறீங்களே மாட்டு அடிக்கிற மாதிரி என்றார்கள் கூட இருந்த இளைஞர்கள் எல்லாம் அதற்கு பக்கரியின் தந்தை ராஜேந்திரன் சொன்னார் நீங்கெல்லாம் சேர்ந்தது தானே இந்த மாதிரி வேலை எல்லாம் செஞ்சு இருக்கீங்க என்றார் பக்ரி தந்தை ராஜேந்திரன் இன்னொரு இளஞ்சின் ஓடி வந்து எதுக்கு உங்க பையன் இப்படி அடிக்கிறீங்க பக்கிரி பாவம் அவன் கண்ணுல பட்டிருச்சல்ல அந்த பொம்பள புள்ளைங்க சொல்லுச்சுனி அப்படி அடிக்கிறீங்களா உங்க உங்கள் பையன் வழி தாங்காமல் கண் வழியில துடிக்கிறான் பாருங்க என்று ஓடிபோய் அவன் கண்களை தடவை கொண்டு அணைத்துக் கொண்டான். பக்ரி வலிக்குதுடா வலிக்குதாடா என்னடா ஆச்சு? என்னடா ஆச்சு என்று கூட இருந்து ஒரு இளைஞன் கேட்டான். அதற்கு அந்த கண்ணில் அடிபட்ட இளைஞன் பக்ரி கண் வலி தாங்காமல் சொன்னா அப்பா சாட்டையால் அடிச்சதுல கண்ணுல பட்டுடிச்சிடா அடிச்சது வலிக்குதுடா கண் திறக்கம் முடியலடா என்று அழுதான் இன்னொரு இளைஞரும் அது போல் அவன் தந்தையை அடிக்க வருவதைப் பார்த்து தண்ணியை விட்டு கரைக்கு ஓடி வந்தான் அவன் தந்தை அவனை ஓடி ஓடி விரட்டிஅவனை அடிக்க போனார்.

அப்போது அந்த இளைஞனை விரட்டும் போது அவன் தந்தை ஏரியின் கரையில் இருந்து கால் வலிக்கு விழுந்து உருண்டு தண்ணியில் விழுந்து விட்டார் இதைப் பார்த்த ஒரு சில இளைஞர்கள் டேய் ஜெயமூர்த்தி டேய் ஓடாதடா ஓடாதடாடாதடா உங்க அப்பா கரையிலிருந்து கால் வலிக்கு ஏரிக்குள்ள தண்ணில விழுந் துட்டாருடா உருண்டு தண்ணில விழுந்துட்டாருடா போடாதடா ஓடியாடா ஓடியாடா இங்கே திரும்பி பாருடாஎன்று கத்தினார்கள் ஜெயமூர்த்தியை பார்த்து நண்பர்கள் கத்துவதை காதில் கேட்ட ஜெயமூர்த்தி ஓடுவதை நிறுத்தி விட்டு பின்னால் திரும்பி பார்த்தான் ஜெயமூர்த்தி அப்போது அவன் தந்தையான ராமசாமி தலைகீழாக விழுந்து கிடப்பதை பார்த்து அப்பா அப்பா என்ன ஆச்சு? என்ன ஆச்சுஎன்று கண் கலங்கிகத்திக் கொண்டே தூக்க ஓடினான்.

அப்போது கூட இருந்த இளைஞர்களும் ஓடி போய் என்னாச்சோ ஏதாச்சோ என்று ஜெய மூர்த்தியுடன் சேர்ந்து நண்பர்களோடு சேர்ந்து தூக்கினார்கள் அப்பா என்னப்பா என்னப்பா என்ன ஆச்சு என்றான் மகன் ஜெயமூர்த்தி அப்போது அவன் தந்தை ராமசாமிக்கு கால்களிலும் கையில் பலமாக அடிபட்டு ஒரு கை தூக்க முடியாமல் கை பேச விக்கிச்சு வழி தாங்க முடியாமல் கத்துவும் இல்லாமல் கத்தாமலும் வலி தாங்கியும் தாங்க முடியாமலும் மண வேதனையில் இப்படி ஆயிடுச்சு பையனை விரட்ட அடிக்கபோய் இப்படி ஆயிடுச்சு என்று மனசுக்குள்ளே வெந்தும் வேகாத அடுப்பில் வைத்த சாதம் போல் கொதித்தார் கோபம் பொல்லாதது என்று மனதுக்குள்ளே உணர்ந்து அழுது தன் மகனையும் அவன் நண்பர்களையும் பார்த்தார்.

ராமசாமி கண்களில் மேகத்தில் மழை வருவது போல் இவரது விழிகளில் நீர் தேங்கிருந்தது இதைப் பார்த்த அவர் மகனும்கூட இருந்த இளைஞர்களும் டேய் வலி அதிகமா இருக்கும் போலடா, உங்க அப்பாவை பார்த்தால் என்று மெதுவாக தூங்குங்க டா அப்பாவை கை தாங்கல என்றான் அவரது மகன் ஜெயமூர்த்தி மற்ற இளைஞர்களும் மெதுவாக தூக்கினார்கள் அவர் வழி தாங்க முடியாமல் மெதுவாக கத்தினார் கொஞ்சம் பொருங்கப்பா டாக்டர் கிட்ட கூட்டிட்டு போலாம் என்று அவர் மகன் ஜெயமூர்த்தி சொன்னான்.

(தொடரும்)

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,

# சான்றோர் குரல்

| சந்தா விபரம்: | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER: G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

| விளம்பர கட்டணம் | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

Contact No: 99622 35002

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE

ஆன்மீகம்

# ஐயப்பா...

ஐயப்பா சாமியே ஐயப்பா சாமியே

சரணம் ஐயப்பா விரதம் இருந்தோம்

விரதம் இருந்தோம்

வில்லாளி வீரனை காண தானே வந்தோம்

ஐயப்பா சாமியே சரணம்

ஐயப்பா விரதம் இருந்தோம்

ஐயப்பா தவம் இருந்தோரும்

தவம் இருந்தோம்

சாமியே சரணம் ஐயப்பா

ஐயப்பனே உன்னை காண தன்னைப் பாதவமிருந்தோம்

ஐயப்பா பக்தர்களையும் காக்கும் மணிகண்ட சாமியே காண வந்தோம் ..காண வந்தோ சபரி மலையிலே ஐயப்பனை காண வந்தோம்..

சாமியே சரணம் ஐயப்பா மணி ஓசை கேக்குது சபரிமலையிலே மனசு எல்லாம் நிறையுது ஐயப்பனின் பக்தி மழையிலே மகரஜோதி ராஜனின் மகிமையிலே மனம் கண்டு மகிழுது.

ஐயப்பனின் அருளாலே பக்தி கூட்டம் மலையிலே பக்தர்கள் கூடி சொல்லும் சரண கோசம் தானையா சபரி மலையிலே ஐயப்பனை காண வந்த பக்தர்களின் தலையிலே ஏந்தி வருவார்கள் இருமுடி மனசுல பக்தி என்னும் சரவடி சரண கோசம் சொல்வதிலே சாஸ்தாவின் அருள்மொழி வாய்மொழி கூறுவதெல்லாம் சாமியே சரணம்

ஐயப்பா சரணம் சாமியே

சரணம் ஐயப்பா ஐயப்பா

என்று சரண கோசங்கள் சொல்லுங்கோ மலை எங்கும் ஐயனின் பக்தியில் மணமணக்கும் நெய்யாலே அபிஷேகம் ஐயப்பனுக்கு காணுங்கோ கண்கள் குளிர காணுங்க பக்தர்களும் பக்திகளும் மனம் மகிழுந்து சொல்லும்

சரண கோசம் சரண கோசம் சொல்லுங்கோ

சாமியே சரணம் ஐயப்பா ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா

கன்னி சாமியும் வாராங்க ஐயப்பா

மணிகண்ட சாமியும் வாராங்க ஐயப்பா

அம்மா சாமியும் வாராங்க ஐயப்பா

அப்பா சாமியும் வாராங்க ஐயப்பா

குரு சாமியும் வாராங்க ஐயப்பா

உன்னை காண தானே ஐயப்பா



சாமியே சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா

ஐயப்பனை இரவில் காண

பம்பா நதியில் குளித்து நிலவும்

மலையே ஏறுது சாமியே சரணம் ஐயப்பா

ஐயப்பன் தரிசனம் கண்டு மகிழ்ந்து

நிலவும் நமக்கும் ஒலி தருது சாமியே

சரணம் ஐயப்பா ஐயப்பா

சூரியனும் காலையிலே ஐயப்பனை

வணங்கி நமக்கு ஒலி தருது

நாமும் ஐயப்பனை கண்டு வணங்கி

தரிசனம் பெற்று மனம்மகிழ்ந்து

வாழ்வோ சாமியே சரணம் ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

சென்னையில் மீண்டும் அமைகிறது ஃபோர்டு வாகன இன்ஜின் உற்பத்தி ஆலை:

# ரூ.3,250 கோடி முதலீட்டில் வாகன இன்ஜின் உற்பத்தி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



மறைமலை நகரில் ரூ.3,250 கோடி முதலீட்டில் அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் உற்பத்தி மேற்கொள்வதற்காக ஃபோர்டு நிறுவனத்துடனான முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

சென்னையை அடுத்த மறைமலை நகரில் ரூ.3,250 கோடி முதலீட்டில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன இன்ஜின் உற்பத்தி ஆலையை அமைப் பதற்காக ஃபோர்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் ஸ்டாலின் முன்னிலை யில் நேற்று கையெழுத்தானது.

இதுகுறித்து அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாட்டிலேயே 2வது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் தமிழகம் விளங்கி வருகிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான லைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் அரசு சிறப்பாக செயல்படுவதாக, 202425ம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030ம் ஆண்டுக்குள் தமிழக பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வளர்ச்சி பெறவும், தேவையான முன்னெடுப்பு எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த 2024ல் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.அப்போது அவர்கள் உறுதியளித்தபடி, ஃபோர்டு நிறுவனம் ரூ.3,250 கோடி முதலீட்டில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் (Next-Gen Engine) உற்பத்தி திட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்டிஆர்பி.ராஜா, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், துறை செயலர் வி.அருண்ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது, ஃபோர்டு நிறுவனத்தின் உலகளாவிய இயக்குநர் மார்ட்டின் எவரிட், துணைத்தலைவர் மாத்யூ கோடிலூஸ்கிஉள்ளிட்டோர் பங்கேற்றனர். இதுகுறித்து முதல்வர் வெளியிட்ட வலைத் தளப் பதிவில்,'முழு ஆற்றலுடன் சென்னைக்கு மீண்டும் வருகிறது ஃபோர்டு நிறுவனம். மிக நீண்ட, நம்பிக்கை கொண்ட உறவினைப் புதுப்பிக்கும் வகையில் இந்த ஆற்றல்மிகு மீள்வருகை அமைந் துள்ளது. வேலை வாய்ப்புகள் உருவாவ தோடு, ஆட்டோமொபைல் உதிரிபாகச் சூழலும் வலுவடையும். அடுத்த தலைமுறை இஞ்ஜின் களை உற்பத்தி செய்ய இந்தியாவின் ஆட்டோ மொபைல் தலை நகரத்தைத் தேர்வு செய் துள்ள ஃபோர்டின் முடிவானது, தமிழக தொழில்துறை வலிமைக்கும் உலக உற்பத்திச் சங்கிலியில் தவிர்க்க முடியாத இடத்துக்கும் மற்றுமொரு சான்றாக உள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.

ஆசிய இளையோர் கபடி போட்டியில் தங்கப்பதக்கம்

# தமிழக வீரர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

## தலா ரூ.25 லட்சம் ஊக்கத்தொகையும் வழங்கினார்

தமிழக அரசு வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: பஹ்ரைன் நாட்டின் ரிப்பா நகரில் அமைந்துள்ள ஈசா ஸ்போர்ட்ஸ் சிட்டியில் கடந்த 19ம் தேதி முதல் 23ம் தேதி வரை நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் கபடி விளையாட்டு வரலாற்றில் முதன்முறையாக அறிமுகமானது.

சுற்றுப்போட்டித் தொடராக நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஏழு நாடுகள் பங்கேற்றன. இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கு முன்பு ஏழு அணிகள் ரவுண்ட் ராபின் வடிவத்தில் போட்டியிட்டன. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள் இரண்டிலும் அசத்தலான ஆட்டங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்த வெற்றியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு திறமையான கபடி வீரர்கள் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் (ஆண்கள் பிரிவு) மற்றும் சென்னை கண்ணகிநகரைச் சேர்ந்த கார்த்திகா ரமேஷ் (பெண்கள் பிரிவு) ஆகியோர் இந்திய அணியின் வெற்றிக்குக் காரணமான முக்கிய வீரர்களாக திகழ்ந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்த அபினேஷ் மோகன்தாஸ் என்பவர் 2019 முதல் 2025 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேனியில் உள்ள விளையாட்டு விடுதியில் முறையான பயிற்சி பெற்று தனது திறனில் முன்னேற்றம் கண்டுள்ளார். சென்னை, கண்ணகி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் கார்த்திகா ரமேஷ் தேசிய அளவிலான SGFI, Khelo India மற்றும் Federation Nationals உள்ளிட்ட போட்டிகளில் மொத்தம் 11 முறை தமிழ்நாட்டிற்காக விளையாடி, அதில் 8 பதக்கங்களை வென்ற சிறப்புடைய திறமையான விளையாட்டு வீராங்கனை ஆவார்.



மேலும், அவர் 5 முறை தமிழ்நாடு அணியின் அணித்தலைவராக பொறுப்பேற்று அணியை வழிநடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவர் தொடர்ந்து வெளிப்படுத்திய விளையாட்டு திறமைக்காக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உயரிய ஊக்கத் திட்டத்தின் மூலம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளார்.

ஆசிய அரங்கில் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை அங்கீகரிக்கும் விதமாக, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோரை பாராட்டினார். மேலும் ஊக்கத்தொகையாக கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் கார்த்திகா ரமேஷ் ஆகியோருக்கு தலா 25 லட்சம் என மொத்தம் ரூ.50,00,000 (ஐம்பது லட்சம்) ஊக்கத் தொகை வழங்கினார்.

முதல்வர் உத்தரவின்படி, ரூ.15,00,000 உயரிய ஊக்கத்தொகை மற்றும் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்த்த தமிழ்நாட்டின் கபடி நட்சத்திரங்களின் சிறந்த சாதனையை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து கூடுதலாக ரூ.10,00,000 வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனை தமிழ்நாடு ஒரு முன்னணி விளையாட்டு மாநிலமாக உருவெடுத்து வருவதற்கான உறுதியான சான்றாகும்.

விளையாட்டாளரை மையப்படுத்திய திட்டங்கள், அறிவியல் சார்ந்த பயிற்சி முறைகள் மற்றும் மேம்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம், இந்திய அளவிலான சாம்பியன்களை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேற்றப் பயணத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்நிகழ்வின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பயிற்சியாளர்கள் மா.ராஜேஷ், மா.நாகராஜன் மற்றும் கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ், கார்த்திகா ரமேஷ் ஆகியோரது பெற்றோர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் பீகார் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதா?

# பிரதமர் மோடிக்கு தலைவர்கள் கண்டனம்

பீகார் மக்கள் தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுவதாக பிரதமர் மோடி பேசியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், செல்வப்பெருந்தகை, சண்முகம், வேல்முருகன், ஜவாஹிருல்லா உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் கடும்கண்டனம்தெரிவித்துள்ளனர். எங்கு சென்றாலும் தமிழர்களின் மீதான வன்மத்தை வெளிப்படுத்து வதை விட்டுவிட்டு, நாட்டின் நலன் மீது கவனம் செலுத்துங்கள் என்று முதல்வர் அறிவுரை கூறியுள்ளார். பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு வரும்போது தமிழில் வணக்கம் என்று பேசுவதும், திருக்குறள் சொல்வதும், தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் மிகவும் நேசிப்பதாக பொதுக்கூட்டங்களில் பேசுவதும் வாடிக்கை. ஆனால், தமிழகத்திற்கான எந்த ஒரு திட்டத்துக்கும் நிதி ஒதுக்காமல் புறக்கணிப்பார். உதாரணமாக, ஜிஎஸ்டி நிலுவைத்தொகை, கல்விக்கான நிதி, 100 நாள் வேலை திட்டம், பிரதமர் வீடு கட்டும் திட்டம், மெட்ரோ ரயில், எய்ம்ஸ் மருத்துவமனை என பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கப்படாமல் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது. ஆனாலும், தமிழக அரசு நிதியை வைத்தே இந்த திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்.



இந்த நிலையில்தான் தற்போது பீகார் மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் பிரசாரம் செய்து வரும் பிரதமர் மோடி நேற்று முன்தினம் பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்போது, பீகாரைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் துன்பம் இழைப்பதாக ஒரு பொய்யான செய்தியை கூறி தமிழர்கள் மீது வன்மத்தை வெளிப்படுத்தி உள்ளார். தமிழர்கள் மீதும் தமிழ்நாட்டின் மீதும் இப்படி குறை கூறி மக்களை திசை திருப்பும் போக்கு இப்போது மட்டுமல்ல பாஜகவினரால் முன்பே பலமுறைகூறப்பட்டுள்ளது.

முன்னதாக, ஒடிசா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்த நவீன்பட்நாயக் நம்பிக்கையை பெற்று அவருடைய தனிச் செயலாளராக பணியாற்றியவர் தமிழ்நாட்டை சேர்ந்த பி.கே. பாண்டியன். ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலின் போது பிரசாரம் செய்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பூரி ஜெகந்நாதர் கோயில் ஆலயக் கருவூலத்தின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று கூறியதுடன், ஒடிசாவை தமிழர்கள் ஆள்வதா என தமிழர்களை திருடர்கள் போல் கேவலப்படுத்தி ஒரு பொய்யான வதந்தியை கிளப்பிவிட்டவர்கள் தான் பாஜ தலைவர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் பல லட்சக்கணக்கான வடமாநில தொழிலாளர்கள் வந்து தங்கி கூலி வேலைகள் செய்து மாதந்தோறும் பல கோடி ரூபாயை வடமாநிலங்களில் உள்ள தங்களது குடும்பங்களுக்கு அனுப்பிக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வருவதை இன்றும் காணலாம். 60 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிமாநில மக்கள் தமிழகத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. ஒரு ஹோலி பண்டிகையை கொண்டாடுவதற்காக வடமாநில தொழிலாளர்கள் ரயில் மூலம் அவர்களது சொந்த மாநிலத்திற்கு பயணம் செய்யப் புறப்பட்ட காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது.

இதை மையப்படுத்தி வடமாநில தொழிலாளர்களை தமிழர்கள் தாக்கிவிட்டார்கள். அதனால் இவர்கள் தங்கள் மாநிலங்களுக்கு திரும்புகிறார்கள் என்று அபாண்டமான ஒரு பொய்ச் செய்திகளை பரப்பினார்கள். செய்தி வெளிவந்தவுடன் முதல்வர்

மு.க.ஸ்டாலின் நேரிடையாக தலையிட்டு பிரச்சினை உண்மையா என்பதை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதில் உண்மை இல்லை, இது வடமாநிலத்தை சேர்ந்த பாஜ நிர்வாகிகளின் சதி வேலை என்பது அப்பட்டமாக தெரியவந்தது.

இப்படி, தமிழ்நாட்டில் வடமாநிலத்தவர்கள், குறிப்பாக பீகாரிகள் தாக்கப்படுவதாகவும் அவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் இங்கு வாழ்வதாகவும் அடிப்படையற்ற வதந்திகளை மனிஷ் காஷ்யப் எனும் யூடியூபர் பரப்பியதால், அவர் கைது செய்யப்பட்டார். பீகார் தேர்தல் பிரசாரத்தில் தேவையில்லாமல் தமிழர்களை வம்புக்கு இழுத்து பிரதமர் பேசியுள்ளார். இது ஒரு நாட்டின் பிரதமர் பொறுப்பில் இருப்பவர் பின்பற்றும் நடைமுறையா? இது வருந்தத்தக்கது என்று தமிழக மக்கள் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். பாஜ சொல்லும் பாதக மொழிகளை, பிரித்தாளும் சூழ்ச்சிகளை தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியா ஏற்காது. இதுபோன்ற பிரதமர் மோடியின் தொடர் குற்றச்சாட்டுகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்ட சமூக வலைத்தளப் பதிவு: இந்த நாட்டில் உள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஒடிசா பீகார் என்று எங்கு சென்றாலும், பாஜவினர் தமிழர்களின் மீதான வன்மத்தை தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதலமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பாஜவினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**செல்வப்பெருந்தகை (தமிழக காங்கிரஸ் தலைவர்):** உச்சபட்ச பதவியில் இருக்கும் பிரதமர் மோடியின் பேச்சு வேதனையை அளிக்கிறது, கண்டனத்திற்குரியது. வாக்கு வங்கிக்காக உண்மைக்கு புறம்பாக பேசுகிறார். பீகார் மாநிலத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாததால் தான் இங்கு வந்து வேலை பார்த்து, பீகார் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

**பெ.சண்முகம்(மார்க்சிஸ்ட்):** பீகார் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டில் பீஹாரிகள் தாக்கப்படுவதாக பிரதமர் கூறி இருப்பது ஐமுக்காளத்தில் வடிகட்டிய பொய். இனப்பகைமையை உருவாக்கும் இந்தப் பேச்சுக்கு வன்மையான கண்டிக்கத்தக்கது. இதன்மூலம் பிரதமர் பீகார் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பிலும், திங்கிற சோற்றிலும் மண் அள்ளி போடுகிறார் என்பதை அந்த தொழிலாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி):** தமிழகத்தில் பீகார் மக்கள் துன்புறுத்தப்படுவதாகவும், அவமதிக்கப்படுவதாகவும், பிரதமர் நரேந்திர மோடி பீகாரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசியிருப்பது, முழுமையாக ஆதாரமற்றது. அரசியல் நோக்கம் உடையது. தமிழ்நாடு என்றென்றும் மொழி, மத, இன வேறுபாடு கடந்து, ஒற்றுமையுடன் வாழும் மண்ணாக திகழ்கிறது. உண்மையில், 2014ம் ஆண்டு முதல், நரேந்திர மோடி தலைமையிலான பாஜ ஒன்றிய ஆட்சிக்கு வந்த பின்னர், வட மாநிலத்தவர்களின் திட்டமிட்ட குடியேற்றம், தமிழ்நாட்டில் வேகமாக நடைபெற்று வருகிறது. பிரதமர் மோடி கூறிய இந்த பொய்யான, பிரிவினையை ஊக்குவிக்கும் பேச்சை தமிழக வாழ்வுரிமைக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

**கனிமொழி எம்பி (திமுக துணை பொதுச்செயலாளர்):** வடமாநிலங்களில் தேர்தல் வந்துவிட்டால், தமிழ்நாட்டையும் தமிழர்களையும் எதிரியாகச் சித்தரித்து வெறுப்புவாத அரசியல் செய்வது பாஜவின் வாடிக்கை. கடந்த ஒடிசா தேர்தலிலும் இதையே தான் செய்தனர். ஆனால், கோவிட் பெருந்தொற்றின்போது யார் தங்களை நடக்கவிட்டு கொடுமைப்படுத்தியது, அக்காலத்தில் எவ்வாறு தமிழ்நாடு தங்களுக்கு உதவியது என்று அந்த தொழிலாளர்களுக்கு தெரியும். தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளாக பீகாரைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே தனது அரசியலைச் செய்ய முடியாமல் துன்பப்பட்டு வருகிறார். அவரும் ராஜ்பவனில் வசித்து வருகிறார்.

**ஜவாஹிருல்லா எம்எல்ஏ(மமக தலைவர்):** பிரதமர் பொறுப்பு என்பது கண்ணியத்துக்கு உரியது. ஆனால் பிரதமர் மோடி தமிழ்நாட்டில் பீகார் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்கிற பிளவு அரசியலை பேசியிருக்கிறார். பிரதமர் மோடியின் கருத்து அவரது முந்தைய வெறுப்பு பேச்சுகளைப் போல் ஆதாரமற்றது மட்டுமின்றி ஆழமான பிளவுபடுத்தும் தன்மை கொண்டவை என்பதில் ஐயமில்லை. பீகார் மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் அமைதியாக வேலை செய்கிறார்கள், மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிக்கிறார்கள். அவர்களை துன்புறுத்தலுக்கு ஆளானவர்களாக பிரதமர் சித்தரித்திருப்பது தமிழ்நாட்டில் அவர்களின் நம்பிக்கையையும் பாதுகாப்பையும் சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. பிரதமர் தனது பதவிக்கான கண்ணியத்தையும் மாண்பையும் குறைத்து விட்டார். மோடியின் தமிழர் விரோதக் கருத்துகள் குறித்து அதிமுகவின் நிலைப்பாடு என்னவென்பதை எடப்பாடி பழனிசாமி விளக்குவாரா என்று கூறியுள்ளார். ●

# பணி நியமனத்தில் முறைகேடு இல்லை

## சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்: அமைச்சர் கே.என்.நேரு



“நகராட்சி நிர்வாகத் துறை உதவி செயற்பொறியாளர் நியமனத்தில் முறைகேடுகள் இல்லை. அரசுக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது. அரசியல் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றை முறியடிக்கத் தேவையான அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் துறை மேற்கொள்ளும்.” என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 2,538 பணியிடங்கள் நியமனத்தில் ரூ.888 கோடி லஞ்சம் பெறப்பட்டு நியமனங்கள் நடைபெற்றுள்ளதாக அமலாக்கத் துறையின் புகாரை முன்வைத்து நீதித்துறை மேற்பார்வையில் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும். இதுவே தமிழக மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு, “லட்சக்கணக்கானோர் விண்ணப்பித்து இருந்த நிலையில், ஒருவர் கூட ஆட்சபனை தெரிவிக்கவில்லை. அரசியல் நோக்கத்தோடு மேற் கொள்ளப்படும் இத்தகைய

நடவடிக்கைகளை கண்டிக்கிறேன்.

ஒளிவுமர்வற்ற முறையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. நகராட்சி நிர்வாகத் துறை உதவி செயற்பொறியாளர் நியமனத்தில் முறைகேடுகள் இல்லை. அரசுக்கு களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது." எனத் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சர் கே.என்.நேரு, "திராவிட மாடல் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற அரசியல் உள்நோக்கத்தோடு, பல ஆண்டு காலத்துக்கு முந்தைய வங்கி வழக்கு ஒன்றினை தூசு தட்டி எடுத்து, அதனை ஊதிப் பெரிதாக்கும் முயற்சியில் தோற்றுப் போன ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ள மேலும் ஒரு முயற்சி தான், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணி நியமனம் குறித்த நேற்றைய கடிதம்.

2011ம் ஆண்டிலிருந்து 2021ம் ஆண்டு வரையுள்ள பத்தாண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் போதிய நியமனங்கள் செய்யப்படாமல், காலிப் பணியிடங்கள் அதிகமாகி நிர்வாகத்தை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்த நிலையில், 2019 பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்ப வேண்டும் என்பதற்காக, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக கடந்த 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பிற பணியிடங்களையும் சேர்த்து, 2,569 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

2011ம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு வரையுள்ள பத்தாண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் போதிய நியமனங்கள் செய்யப்படாமல், காலிப் பணியிடங்கள் அதிகமாகி நிர்வாகத்தை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்த நிலையில், 2019 பணியிடங்களை நேரடி நியமனம் மூலமாக நிரப்ப வேண்டும் என்பதற்காக, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக கடந்த 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பிற பணியிடங்களையும் சேர்த்து, 2,569 பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இப்பணியிடங்களை வெளிப்படையான, ஒளிவுமறைவற்ற முறையில் நிரப்புவதற்காக தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெறுவதற்கென தனியாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு, அந்த இணையதளம் மூலமாக, லட்சத்து 499 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு இணையவழியில் நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக, 38 மாவட்டங்களில் உள்ள 591 மையங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன.

இந்த எழுத்துத் தேர்வுகள் அனைத்தும், அண்ணா பல்கலைக்கழகம் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்டு, எழுத்துத் தேர்வு முடிவுகளும் இணைய தளத்தில் 20.9.2024 அன்று வெளியிடப்பட்டன. நியாயமான முறையில் தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதால், இந்தத் தேர்வில் கலந்து கொண்ட லட்சக்கணக்கான விண்ணப்பதாரர்களிடமிருந்து ஒரு ஆட்சேபணை கூட பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, பல்வேறு பணியிடங்களுக்கு, பணித் தகுதியின் அடிப்படையில், அதிகாரிகளைக் கொண்ட தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பதவிகளுக்கு 13 தேர்வுக் குழுவினால் 7 ஆயிரத்து 272 தேர்வர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பும் நேர்முகத் தேர்வுகளும் நடத்தப்பட்டன.

இந்த சான்றிதழ் சரிபார்ப்பும், நேர்முகத் தேர்வுகளும் முடிவுற்ற பின்னர், இறுதித் தேர்வு முடிவுகள் இணைய தளத்தில் வெளியிடப்பட்டு, மதிப்பெண் மற்றும் மற்றும் இடஒதுக்கீடு அடிப்படையிலும், கலந்தாய்வு முறையிலும், இறுதியாக 2,538 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நேரடி நியமனம் தொடர்பாக பல்வேறு வழக்குகளும், தடையாணைகளும் நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 4.7.2025 அன்று, அனைத்து தடைகளும் உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட நிலையில், இறுதித் தேர்வுப் பட்டியலும் வெளியிடப்பட்டது.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணியாணைகள் முதல்வரால் வழங்கப்பட்டன. இத்தகைய ஒரு வரலாற்றுச் சாதனை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் நிகழ்த்தப்பட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், இதற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில், அமலாக்கத் துறை மூலமாக ஒன்றிய அரசு இத்தகைய அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இத்தேர்வுகளை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்திய அண்ணா பல்கலைக்கழகமானது, உலகில் தலைசிறந்த சுயாட்சி பல்கலைக்கழகங்களுள் ஒன்று என்பதையும், இப்பல்கலைக்கழகம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நகராட்சி நிர்வாகத் துறையின் எந்த விதக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது அல்ல என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

முந்தைய ஆட்சிக் காலத்திலும், அதாவது கடந்த 2012, 2013, 2014, 2015 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு பதவிகளுக்கு இதே அண்ணா பல்கலைக்கழகம் மூலமாகத் தான் தேர்வுகள் நடத்தப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். இந்நிலையில், கடந்த 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வுகளில் மட்டும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அலுவலர்கள் தலையிட்டதால் தவறுகள் நிகழ்ந்துள்ளன என்ற கூற்று நகைப்புக்குரியது.

இரண்டு லட்சம் தேர்வர்கள் விண்ணப்பித்து, ஒரு லட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதி, ஒளிவுமறைவற்ற முறையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு, இறுதியாக 2,538 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சிறப்பாகப் பணிபுரிந்து வரும் நிலையில், இவ்வாறு களங்கம் கற்பிக்கும் முயற்சி எக்காலத்திலும் வெற்றி பெறாது.

அரசியல் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றை முறியடிக்கத் தேவையான அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். ●



# ர:ஃபேல் போர் விமானத்தில் பயணித்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு!

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அம்பாலா விமானப்படை தளத்தில் இருந்து (அக்.,29) ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்தார். இது வரலாற்று சிறப்புமிக்க பயணமாக பார்க்கப்படுகிறது.

ஹரியானாவின் அம்பாலா விமானப்படை தளத்திலிருந்து ரஃபேல் போர் விமானத்தில் (அக்.29) குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பயணம் செய்தார். இது வரலாற்று சிறப்புமிக்க பயணமாக பார்க்கப்படுகிறது. முன்னதாக, விமானப்படைத் தளபதி (சிகிஷி) ஏர் சீஃப் மார்ஷல் அமர் பிரீத் சிங் விமானப்படை நிலையத்தில் இருந்து, முர்முவை முறைப்படி வரவேற்று, மரியாதை செய்தார்.

இது தொடர்பாக நேற்று குடியரசு தலைவர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில், "குடியரசு தலைவர் திரவுபதி முர்மு அக்டோபர் 29ஆம் தேதி ஹரியானாவின் அம்பாலாவுக்குச் செல்கிறார். அங்கு அவர் ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்வார்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி திரவுபதி முர்மு இன்று பயணம் செய்தார். இது வரலாற்று சிறப்புமிக்க



பயணமாக பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே, 2023ம் ஆண்டு அசாமின் தேஜ்பூர் விமானப் படைத்தளத்தில் இருந்து சுகோய் 30 ரக போர் விமானத்தில் திரவுபதி முர்மு பயணம் செய்துள்ளார். அவருக்கு முன்பு முன்னாள் குடியரசுத் தலைவர்கள் அப்துல் கலாம் மற்றும் பிரதீபா பாட்டீல் ஆகியோர் சுகோய் 30 எம்கேஐ போர் விமானத்தில் பயணித்திருந்தனர்.

பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான டசால்ட் ஏவியேஷன் தயாரித்த ரஃபேல் போர் விமானங்கள், கடந்த 2020ம் ஆண்டு இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட்டன. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு, பதிலடியாக இந்தியா நடத்திய ஆபரேஷன் சிந்தூரின்போது ரஃபேல் போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



ஹெலிகாப்டரில் ஆய்வு செய்த முதல்வர் சந்திரபாபு நாயுடு

# ஆந்திராவை புரட்டிப் போட்ட மோந்தா புயல்

மோந்தா புயல் ஆந்திராவை புரட்டி போட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தார். வங்க கடலில் மையம் கொண்டிருந்த மோந்தா புயல் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு காக்கிநாடா மசூலிப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

அப்போது சுமார் 100 முதல் 110 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கோனசீமா, விசாகப்பட்டினம், விஜயநகரம், அம்பேத்கார், ஸ்ரீகாகுளம், பிரகாசம், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல கிராமங்கள், நகரங்கள் இருளில் மூழ்கின. கோனசீமா மாவட்டத்தில் மரம் விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. பல ஆயிரம் ஏக்கர் நெல், பருத்தி, மிளகாய், வாழை, பப்பாளி, தென்னை மரங்கள் அழிந்தன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் சேதத்தை விட அதிகமாக பொருட்சேதத்தை இந்த மோந்தா புயல் ஏற்படுத்தி விட்டது. ஆந்திராவில் மோந்தா புயலால் 249 மண்டலங்கள், 48 நகராட்சிகள், 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதாக ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தெரியப்படுத்தி உள்ளது. இந்நிலையில் நேற்று, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அமராவதியில் காணொலி மூலம் புயல் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசும்போது, ‘‘புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். எங்கள் அரசு உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தரும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு வருமாறு எடுத்துரைக்க வேண்டும்.

ரூ.1000 நிதியுதவி: வீடு, வாசல் இழந்த மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். அரசு தரப்பில் அவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டும். முகாம்களில் தங்கி உள்ள ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,000 வீதம் நிதி உதவி வழங்கி, அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிகபட்சமாக குடும்பத்துக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் வழங்குங்கள். புயல் வருவதை நாம் தடுக்க முடியாது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நாம் அதன் பாதிப்பை குறைத்து கொள்ள முடியும். தற்போது மோந்தா புயலால் 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், பொருட் சேதம் மிக அதிகமாக உள்ளது.

கடைநிலை ஊழியர் முதற்கொண்டு முதல்வர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டதன் விளைவாக மோந்தா புயலை சிறப்பாக எதிர்கொண்டோம்’’ என்றார். அதன் பின்னர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபட்லா, பல்நாடு, கிருஷ்ணா, ஏலூரு, டாக்டர் பிஆர் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

## திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ரோட்டரி ப்ளாசம் இணைந்து நடத்திய

# 333வது இலவச மனநல மருத்துவ முகாம்




திண்டுக்கல் பாரதி சாலையில் அமைந்துள்ள கூட்டுறவு நகரில், திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ரோட்டரி ப்ளாசம் இணைந்து 333வது இலவச மனநல மருத்துவ முகாமை நடத்தினர். மனிதநேயமும் சேவை மனப்பான்மையும் நிறைந்த இந்த நிகழ்ச்சி, பலரின் பாராட்டுக்குரிய செயலாக கருதப்பட்டது

இந்நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் Rtn. B. செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

உதவி ஆளுநர் Rtn. S. சண்முகம்,மற்றும் செயலாளர் Rtn. D. ரெங்கையா, மற்றும் திண்டுக்கல் மாவட்ட ரோட்டரி ப்ளாசம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் Rtn. M. வனிதா ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

மனநல ஆலோசகரும் மருத்துவ நிபுணருமான Rtn. Dr. R.பாலகுரு அவர்கள் நேரடியாக 50க்கும் மேற்பட்ட மனநல பாதிக்கப்பட்ட பயனாளர்களை சந்தித்து பரிசோதனை செய்து ஆலோசனைகளை வழங்கினார்.

மருத்துவரின் வழிகாட்டுதலின்படி, பயனாளர்களுக்கு தேவையான மருந்து மற்றும் மாத்திரைகளும் முறையாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சங்க உறுப்பினர்கள் Rtn. மதன்மோகன், Rtn. திலீப்குமார், Rtn. VTRT. நாகராஜன், Rtn. சுரேஷ், ரோட்டரி ப்ளாசம் மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் Rtn. R. பாஸ்கரன் உள்ளிட்ட திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் கம்பிலியம்பட்டியில் அமைந்துள்ள தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளியான விக்டரி பள்ளியில் 600 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக செங்குருச்சி வனப்பகுதி வனக்காவலர் சிபியா கலந்து கொண்டு மாணவர்களுக்கு மரங்களின் சிறப்புகள் குறித்து விளக்கம் அளித்தார். மேலும் பள்ளி நிர்வாகி

வி. ராஜராஜேஸ்வரி, கல்வி இயக்குநர் ரோட்டேரியன் ஷேர்லி ஜேசுராஜ் , ரோட்டேரியன் பி. கிறிஸ்டோபர், கராத்தே மாஸ்டர் சிவசுப்ரமணி, பாஸ்கரன், மற்றும் ரமேஷ் (சூப்பர் டிவி) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ரோட்டேரியன் பி.எச்.எப். எம். சிவசிதம்பரம் (தலைவர்) மற்றும் ரோட்டேரியன் பி.எச்.எப். கே. துளசிதாஸ் (செயலாளர்) ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களோடு புங்கை, முகிழம், தேக்கு, மகோகனி, நாவல் செம்மரம், நெல்லி, குமிழ் உள்ளிட்ட மரக்கன்றுகளை நடவு செய்தனார்.

# "இந்தியா ஒன்று இந்தியா ஒன்றுபட்டது இந்தியா என்றென்றும் ஒற்றுமையாக இருக்கும்"

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் நாட்டின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, மை பாரத் இணையதளத்தில் அக்டோபர் 6ம் தேதி "இந்தியா ஒன்று இந்தியா ஒன்றுபட்டது இந்தியா என்றென்றும் ஒற்றுமையாக இருக்கும்" என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்

இதனைத் தொடர்ந்து திண்டுக்கல் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மை பாரத் கேந்திரா மற்றும்



காந்திகிராமம் கிராமிய பல்கலைக்கழகம் இணைந்து திண்டுக்கல் சின்னாளப்பட்டி காந்திசிலை முதல் காந்திகிராமம் பல்கலைக்கழகம் வரை வரும் 31ம் தேதி பேரணி நடைபெறுகிறது. இந்தப் பேரணியை திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் துவக்கி வைக்கிறார்.

இந்தப் பேரணியில் இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொள்ளுமாறு காந்திகிராம பல்கலைக்கழக N.S.S. டேவிட் ஜெயராஜ், திண்டுக்கல் மாவட்ட இளைஞர் நலம் அலுவலர் சரண் வீ கோபால், காந்திகிராம பல்கலைக்கழக செய்தி தொடர்பாளர் கேசவராஜன் ஆகியோர் தெரிவித்தனர்.

RNI No. TNTAM/2021/85933

# பாலிவுட் செல்கிறாரா சிவகார்த்திகேயன்?





## பிரபல இயக்குனருடன் சந்திப்பு

இந்த சந்திப்பு இருவரும் ஒரு புதிய படத்தில் இணைந்து பணியாற்ற திட்டமிட்டுள்ளார்களா என்ற ஆர்வத்தை அனைவருக்கும் ஏற்படுத்தியுள்ளது.


நடிகர் சிவகார்த்திகேயன் சமீபத்தில் மும்பையில் உள்ள திரைப்பட இயக்குனர் சஞ்சய் லீலா பன்சாலியின் அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்தார்.

இது ரசிகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் மத்தியில் உற்சாகத்தை தூண்டியுள்ளது. மேலும், இந்த சந்திப்பு இருவரும் ஒரு புதிய படத்தில் இணைந்து பணியாற்ற திட்டமிட்டுள்ளார்களா என்ற ஆர்வத்தை அனைவருக்கும் ஏற்படுத்தியுள்ளது. இருவரும் இந்த சந்திப்புக்கான காரணம் குறித்து எதுவும் பேசவில்லை என்றாலும், அது மக்களைப் பேச வைத்துள்ளது.

காரணம் எதுவாக இருந்தாலும், இந்த சந்திப்பு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தற்போது சிவகார்த்திகேயன் பராசக்தி படத்தில் நடித்து முடித்துள்ளார். சுதா கொங்கரா இயக்கி உள்ள இப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி 14ம் தேதி வெளியாக இருக்கிறது. ரசிகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் மத்தியில் உற்சாகத்தை தூண்டியுள்ளது.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# சிவகார்த்திகேயனின் ஸ்பெஷல் சர்ப்ரைஸ் ‘டூரிஸ்ட் பேமிலி’ டைரக்டரை நேரில் சந்தித்து வாழ்த்து!



‘டூரிஸ்ட் பேமிலி’ பட இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் திருமணம் சென்னையில் கோலாகலமாக நடைபெற்றது.

சசிகுமார், சிம்ரன் நடிப்பில் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற ‘டூரிஸ்ட் பேமிலி’ படத்தை அறிமுக இயக்குநர் அபிஷன் ஜீவின்ந்த் இயக்கி இருந்தார். இப்படத்தை பார்த்து பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டினர். மேலும் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்ற இப்படம் வசூலையும் குவித்தது. இந்த படத்தினை தொடர்ந்து அபிஷன் ஜீவின்ந்த் அடுத்து எந்த நடிகரை வைத்த படம் இயக்குவார் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரே கதாநாயகனாக அறிமுகமாகி உள்ளார். அபிஷன் ஜீவின்ந்த் கதாநாயகமான அறிமுகமாகும் படத்தை ‘டூரிஸ்ட் பேமிலி’யின் இணை இயக்குநர் மதன் இயக்கியுள்ளார்.

படத்தில் பிசியாக நடித்து வரும் இயக்குநர், தனது நீண்ட நாள் காதலியான அகிலாவை நேற்று இருவீட்டாரின் சம்மதத்துடன் இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் திருமணம் செய்து கொண்டார்.

முன்னதாக நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், நடிகர்கள் சசிகுமார், எம் எஸ் பாஸ்கர் , ரமேஷ் திலக், நடிகைகள் சிம்ரன்,அனஸ்வரா விஜயன், சவுந்தர்யா ரஜினிகாந்த், இயக்குநர்கள் 'பூ' சசி, ரஞ்சித் ஜெயக்கொடி உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

‘டூரிஸ்ட் பேமிலி’ படத்தின் தயாரிப்பாளர் மகேஷ் திருமண பரிசாக பிஎம்டபிள்யூ காரை சமீபத்தில் பரிசளித்தார். இந்த நிலையில், திருமண நிகழ்ச்சியில் சர்ப்ரைஸ் விசிட் ஆக சென்ற சிவகார்த்திகேயன் மண மக்களுக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். இந்த வீடியோ சமூக வலைத்தளங் களில் பரவி வைரலாகி வருகிறது.



கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323